இஸ்லாமிய பர்தாவின் முக்கியத்துவமும் அருள்களும்
பக்கம் 3

எஸ்ஸன்ஸ் ஆஃப் இஸ்லாம் 'தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்' (தொடர்-4)
பக்கம் 11

இஸ்ரேல் – ஈரான் போர்
பக்கம் 14

வக்ஃபே நவ் இஜ்திமா யூ.கே. 2025
பக்கம் 18



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | June 2025 | Vol. 4 - Issue No. 7



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311






# திருக்குர்ஆன்

قُلْ لِّلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ
وَيَحْفَظُوْا فُرُوْجَهُمْ ؕ ذٰلِكَ اَزْكٰى لَهُمْ ؕ
اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا يَصْنَعُوْنَ

நீங்கள் நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறுவீராக. இது அவர்களுக்கு மிகத் தூய்மையானதாகும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதனை நன்கு அறிபவனாவான். (24:31)



# ஹதீஸ்

عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ
" الإِيمَانُ بِضْعٌ وَسِتُّونَ شُعْبَةً، وَالْحَيَاءُ
شُعْبَةٌ مِنَ الإِيمَانِ ".

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஈமானுக்கு அறுபதுக்கும் மேற்பட்ட கிளைகள் உண்டு. மேலும் வெட்கம் ஈமானில் ஒரு பகுதியாகும்.

(புஹாரி ஹதீஸ் எண் 9)

# இஸ்லாமிய பர்தாவின் முக்கியத்துவமும் அருள்களும்

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில்)

மதிப்பிற்குரிய டாக்டர் மன்ஸூரா அலாவுத்தீன் ஸாஹிபா (சதர் லஜ்னா இமாயில்லாஹ் பாரத்)

தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது

قُلْ لِّلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ وَيَحْفَظُوْا فُرُوْجَهُمْ ؕ
ذٰلِكَ اَزْكٰى لَهُمْ ؕ اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا يَصْنَعُوْنَ
وَقُلْ لِّلْمُؤْمِنٰتِ يَغْضُضْنَ مِنْ اَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوْجَهُنَّ وَلَا يُبْدِيْنَ
زِيْنَتَهُنَّ اِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلٰى جُيُوْبِهِنَّ

(சூரா அந்நூர் வசனம் 31,32)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் எனும் தம் நூலில் இஸ்லாமிய பர்தா தொடர்பாக இந்த வசனங்களை விவரித்தவாறு கூறுகிறார்கள்:

"........நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தம்முடைய கண்களை அந்நிய பெண்களைப் பார்ப்பதில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என கூறுவீராக. மேலும் பாலுணர்வைத் தூண்டும் பெண்களை உற்றுப் பார்க்கக் கூடாது. அது போன்ற சந்தர்ப்பங்களில் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். தங்களுடைய மறைக்க வேண்டிய இடங்களை முடிந்தவரை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதே போன்று தமது காதுகளை அந்நிய பெண்களின் பாடல்கள் மற்றும் இனிய குரல்களைக் கேட்பதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவர்களின் அழகை வர்ணிக்கும் கதைகளைக் கேட்காதீர்கள். இது பார்வையும் உள்ளமும் தூயதாக இருப்பதற்குரிய சிறந்த வழிமுறைகள் ஆகும். அதே போன்று நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறுவீராக. அவர்கள் அந்நிய ஆண்களைப் பார்ப்பதிலிருந்து தமது கண்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் தமது காதுகளைப் பாலுணர்வைத் தூண்டும் ஆண்களின் குரல்களைக் கேட்பதில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மறைக்க வேண்டிய தமது இடங்களை மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் தங்களுடைய அழகினை வெளிப்படுத்தும் உறுப்புகளை அந்நிய ஆண்களிடமிருந்து மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் தங்களின் முந்தானையால் மார்பை மறைத்து தலையை மூட வேண்டும். அதாவது மார்பும் இரு காதுகளும் தலையும் இரு கன்னங்களும் முந்தானையால் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் நடனமாடுபவர்களைப் போன்று தமது கால்களை நிலத்தில் அடித்து நடக்கக் கூடாது. இவை யாவற்றையும் பின்பற்றுவது தடுமாற்றங்களில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் ஆகும்." (ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 341,342)

நான் எந்த வசனங்களை ஓதினேனோ அவற்றிலிருந்து, பர்தா பற்றிய கட்டளையின் துவக்கம் பார்வையைத் தாழ்த்திக் கொள்வதிலிருந்து ஆரம்பிக்கின்றது என்று தெரிய



வருவகின்றது. பார்வை தூயதாக இருப்பதே உண்மையான பர்தா ஆகும். இவ்விஷயத்தில் ஆண்கள் முதலில் பார்வையைத் தாழ்த்த வேண்டும் என்று அல்லாஹ் வலியுறுத்தியுள்ளான். ஆகவே, பார்வையைத் தாழ்த்திக் கொள்வது என்பது பர்தாவின் முதல் படிக்கட்டு ஆகும். அந்த படிக்கட்டின் மீது ஆணும் பெண்ணும் ஏறிக்கொண்டால் தத்தமது கற்பைப் பாதுகாக்கும் உத்தரவாதத்தை வழங்க முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்கள் தம் பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று வழிகாட்டல் வழங்குகிறது. அவர்கள் ஒருவர் மற்றவரைப் பார்க்காத போது பாதுகாப்பாக இருப்பார்கள். சிறைவாசிகளைப் போன்று பெண்கள் அடைத்து வைக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய பர்தாவின் நோக்கமே கிடையாது! (இதைக் குறித்து) திருக்குர்ஆன் கூறும் பொருள் என்னவென்றால், பெண்கள் மறைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் அந்நிய ஆண்களைப் பார்க்க வேண்டாம். வாழ்வாதார தேவைக்காக எந்த பெண்களுக்கு வெளியே செல்ல வேண்டியது ஏற்படுகிறதோ அவர்கள் வீடுகளை விட்டு வெளியே செல்வதற்கு தடையொன்றும் கிடையாது. அவர்கள் தாராளமாக செல்லலாம். ஆனால், பார்வையின் பர்தா அவசியமாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 405, 2016 ஆம் ஆண்டின் பதிப்பு)

மனிதனுடைய அங்கங்களில் அனைத்தையும் விட அதிக ஈர்ப்பை ஏற்படுத்தக் கூடியது முகம் ஆகும். பெண்கள் தம் அழகை மறைத்துக் கொள்ள வேண்டும் என திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. பெண்கள் இயல்பாகவே (தம்மை) அழகுபடுத்துவதன் பக்கம் சாய்ந்திருக்கும்போது முகத்தை திறந்து வைப்பது எங்ஙனம் சரி! பர்தாவின் கட்டளை இறங்கிய பிறகு தம் அழகை வெளிப்படுத்த வேண்டாம் என அனைத்து முஸ்லிம் பெண்களும் தம் முகத்தை மறைத்துக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: 'பெண்களின் உடல் முழுவதும்

மறைக்கத் தகுந்ததாகும்.' பர்தாவிலிருந்து முகம் விதிவிலக்காக ஆக்கப்படவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: கண்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறிதளவு வரை திறந்து வைக்கலாம். ஆகவேதான், கண்களைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கட்டளை இடப்பட்டுள்ளது. (அல் அஸ்ஹாரு லி ஸவாத்தில் கிமாரி பக்கம் 214)

அன்னார் மேலும் கூறுகிறார்கள்: எந்தப் பெண்கள் அந்நிய ஆண்களிடம் பர்தா செய்யாமல் இருக்கிறார்களோ அவர்களுடன் ஷைத்தான் இருக்கின்றான். (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 69)




இஸ்லாமிய பர்தா என்பது அழகை மறைக்கக் கூடிய உடையும், வெட்கம், பரிசுத்தம் ஆகியவற்றை மேற்கொள் -வதும் ஆகும். மனிதன் அனைத்து ஒழுக்கங்களிலும் உயரிய தரத்தை நிலை நாட்ட வேண்டும் என்ற போதனையை இஸ்லாம் வழங்கியுள்ளது. வெட்கம் என்பது இஸ்லாத்தின் தனிச்சிறப்புமிக்க பண்பாகும். ஹதீஸில் வருகிறது: ஒவ்வொரு மார்க்கத்திற்கும் ஒரு சிறப்புப் பண்பு இருக்கும். இஸ்லாத்தின் சிறப்புப் பண்பு வெட்கம் ஆகும். இஸ்லாம் என்பது இயல்பையொத்த மார்க்கம் ஆகும். அது வெட்கம் எனும் பண்பை ஆண் பெண் இருவருக்கும் கட்டாயமாக்கி இருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் பண்பை முழுமையாக வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ சயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: கற்புள்ள, தூய சூழலை நிலைநாட்டுவதற்கு ஆண் பெண் இருவரும் ஒருவர் மற்றவரிடம் பர்தாவைப் பேணுமாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது. பர்தாவுக்கான கட்டளை ஏன் உள்ளது என்றால், ஆண் பெண் சுதந்திரமான முறையில் சந்திப்பதில் கட்டுப்பாடும், அதன் விளைவால் ஒழுக்கரீதியாக ஏற்படக் கூடிய தீய முடிவுகளிலிருந்து தப்பிப்பதற்கும் ஆகும். ஆகவே பர்தாவை செயல்முறைப் படுத்தியதை வெளிப்படுத்தும் விதமாக (உங்களின்) பார்வையை தாழ்த்திக் கொள்ளுங்கள் என்ற கட்டளை ஆண் பெண் இருவருக்கும் எவ்வித பாகுபடும் இன்றி வழங்கப்பட்டுள்ளது.

பர்தாவின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் தொடர்பான இஸ்லாமிய கட்டளைகளை நாம் படித்துப் பார்த்தால் சந்தேகத்திற்கிடமின்றி மற்ற அனைத்து மார்க்கங்களை விடவும் இஸ்லாம் பர்தாவின் அவசியம் குறித்து அழுத்தம் கொடுத்திருப்பதை பார்க்க முடிகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்முல் மு.்.மினீன் ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) மற்றும் ஹஸ்ரத் மைமூனா (ரலி) ஆகியோரை இப்னு உம்மு மக்தூம் (ரலி) எனும் பார்வை தெரியாத ஒரு சஹாபியிடம் பர்தாவை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவரோ பார்வையற்றவராயிற்றே! அவரால் எங்களைப் பார்க்க முடியாது என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் இருவரும் பார்வையற்றவர்களா என்ன? நீங்கள் அவரை பார்க்க முடியாத என்ன? என்று கேட்டார்கள். (மிஷ்காத் கிதாபுல் அதப்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஆண்கள் பெண்களிடத்திலும், பெண்கள் ஆண்களிடத்திலும் பர்தா செய்ய வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது என்றால் அதற்கான நோக்கம் மனிதனுடைய ந.்.ப்ஸ் தடுமாற்றமடைந்து வழுக்கி விழுவதை விட்டும் தப்பித்திருக்க வேண்டும் என்பதாகும். (அல் பத்ர் தொகுதி 3 பக்கம் 34)

வெட்க உணர்வின் காரணமாக மனிதனுடைய கூற்றிலும் செயலிலும் அழகு உருவாகி விடுகின்றது. ஆகவே படைப்பினங்களின் பார்வையில் வெட்க உணர்வுள்ள மனிதன் ஈர்க்கக் கூடியவனாக ஆகி விடுகின்றான். இறைவனுடைய பார்வையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாக ஆகி விடுகின்றான். திருக்குர்ஆன் இதற்கான சான்றாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மத்யன் (நகருக்கு) ஹிஜ்ரத் செய்தபோது அவர்களை சந்தித்த பெண்கள் தொடர்பாக கூறும்போது அவர்களுடைய வெட்க உணர்வை எடுத்துக் கூறியுள்ளது. அதாவது, அந்த பெண்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடத்தில் தம் தந்தையினுடைய தூதுச் செய்தியை கொண்டு வந்தபோது அவர்களின் நடவடிக்கைகள் மிகவும் கூச்ச சுபாவம் கொண்டதாகவும் ஒழுக்கமுடையதாகவும் இருந்தது. அல்லாஹ்வுக்கு அவர்களின் இந்த நாணமும் வெட்கமும் எந்த அளவு பிடித்து விட்டது என்றால், திருக்குர்ஆனில் அதை இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளான்.

فَجَآءَتۡهُ اِحۡدٰىهُمَا تَمۡشِىۡ عَلَى اسۡتِحۡيَآءٍ

"அவ்விருவருள் ஒருத்தி நாணத்துடன் நடந்து அவரிடத்து வந்தாள்." (சூரா அல் கஸஸ் வசனம் 26)

நாணம் என்பது எவ்வாறான பண்பு என்றால் அதன் காரணமாக மனிதன் பரிசுத்தமான தூய வாழ்வை வாழ்கின்றான். ஆனால் இதற்கு நேரெதிராக எந்த மனிதன் நாணம் எனும் அருளிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆகி விடுகிறானோ அவன் உண்மையாகவே நற்பேறை விட்டு இழப்பிற்குரியவனாக ஆகி விடுகின்றான். அவ்வாறான மனிதனைக் கண்டு இறைவன் அருவெறுப்பு கொள்கின்றான். அவ்வாறான மனிதனிடமிருந்து நன்மையை எதிர்பார்ப்பதும் வீணான ஒன்றாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஒன்று உள்ளது. அன்னார் கூறுகிறார்கள்: 'உனக்கு நாணம் இல்லையேல் விரும்பியதைச் செய்து கொள்.' (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் அதப்).

## பெண்ணின் அந்தஸ்து

இஸ்லாமிய கலீஃபாவின் பொன்மொழிகள்



**எந்த வகையிலும் ஒரு பெண்ணின் அந்தஸ்து ஆணின் அந்தஸ்தை விட குறைவானது அல்ல என்பது தெளிவாகட்டுமாக!**

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்)

வெட்கமற்ற மனிதன் எந்தவோர் ஒழுக்க விதிகளுக்கும் கட்டுப்பட்டவனாக இருக்க மாட்டான் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. அவனுடைய வாழ்வு கட்டுப்பாடற்ற ஒட்டகத்தைப் போன்று ஆகிவிடுகின்றது. முன்னேற்றமடைந்த காலகட்டம் என்று அழைக்கப்படும் இக்காலத்தில் வெட்கத்தின் தரம் தலைகீழாகப் புரியப்பட்டுள்ளது. மேற்கத்திய உலகைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதால் ஏற்படக்கூடிய அபாயகரமான விளைவுகளில் இருந்து தப்பிக்கும் வகையில் இவ்வாறான காலகட்டத்தில் நமது இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிரந்தரமான வழிகாட்டல்கள் நமக்கு கிடைத்துக் கொண்டிருப்பது நம்முடைய நற்பேறு ஆகும்.

நம் அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதி பெண்களிடத்தில் இஸ்லாமிய பர்தாவை நடைமுறைப்படுத்துவதற்காக முயற்சி மேற்கொண்டு வருகின்ற அதே நேரத்தில் முஸ்லிம் அல்லாதவர்கள் சார்பாக பர்தாவின் மீது செய்யப்படுகின்ற தாக்குதல்களையும் வெற்றிகரமான முறையில் எதிர்கொண்டு வருகிறார்கள். அன்னாருடைய ஒவ்வோர் அறிவுரையும் நம்முடைய இம்மை மற்றும் மறுமையை சீர்செய்யக் கூடியதாக உள்ளது. ஆகவே நம்முடைய கடமை என்னவென்றால், நாம் ஹுஸூர் அவர்களின் இந்த அறிவுரைகளைக் கவனமாகக் கேட்பது மட்டுமின்றி நம்மிடத்திலும், நமது சந்ததிகளிடத்திலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதியாக்குவதற்கு எல்லா வகையிலும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: உலகில் உள்ள வெகுஜனம் மார்க்கத்தை விட்டு விலகிச் செல்வதை தற்காலத்தில் நாம் காண முடிகிறது. ஆகவே, அவர்களின் நன்மை, தீமைக்கான தரங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன. உதாரணமாக, இக்காலத்தில் சுதந்திரம் மற்றும் ∴பேஷன் என்ற பெயரில் பெண்களும் ஆண்களும் சந்திப்பது பொதுவானதாக ஆகிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். வெளிப்படையாக வெட்கமற்ற செயல்களைச் செய்வது முன்னேற்றமடைந்ததற்கான அடையாளமாக பார்க்கப்படுகின்றது. வெட்கம் என்பதே இல்லாமல் போய் விட்டது. இதற்கான தாக்கம் இங்கு வசிக்கின்ற நமது ஆண் பிள்ளைகளிடத்திலும் பெண் பிள்ளைகளிடத்திலும் ஏற்படும் என்பதும் வெளிப்படை. ஓரளவுக்கு தாக்கமும் ஏற்பட்டிருக்கலாம்!

சில சிறுமிகள் இளமைப் பருவத்தில் காலெடுத்து வைக்கும்போது எனக்கு கடிதம் எழுதுகிறார்கள். அதில், இஸ்லாத்தில் பர்தா ஏன் அவசியம்? நாங்கள் இறுக்கமான ஜீன்ஸ் மற்றும் பிளவுஸ் அணிந்து கொண்டு புர்கா இல்லாமல் அல்லது கோட் அணியாமல் வீடுகளை விட்டு ஏன் வெளியே செல்லக் கூடாது? இங்கு ஐரோப்பாவில் சுதந்திரமான பெண்களைப் போன்று ஏன் உடை அணியக் கூடாது என்று எழுதுகிறார்கள். நாம் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், நாம் மார்க்கத்தில் நிலைபெற்றிருக்க விரும்பினால் பிறகு மார்க்க போதனைகளின்படியும் அமல் செய்ய வேண்டியது அவசியமாகும். நாங்கள் முஸ்லிம்களாவோம். மார்க்கத்தில் நிலைபெற்றிருக்கிறோம் என்று நாம் அறிவிக்க விரும்பினால், பிறகு இவ்விஷயங்களுக்குக் கட்டுப்படுவதும் அவசியமாகும். அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் விஷயங்கள் மற்றும் கட்டளைகளின்படி செயல்பட வேண்டியதும் அவசியமாகும். வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே வெட்கமுள்ள உடை அணிவதும் பர்தா அணிவதும் நமது ஈமானை காப்பாற்றுவதற்கு அவசியமாகும். முன்னேற்றமடைந்த நாடுகள் சுதந்திரத்தின் பெயரிலோ, முன்னேற்றத்தின் பெயரிலோ தமது வெட்கத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறார்கள் என்றால் அதற்கான காரணம், அவர்கள் மார்க்கத்தை விட்டும் விலகிச் சென்று விட்டார்கள் என்பதாகும். ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட ஓர் அஹ்மதி பெண் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக உறுதிமொழி அளித்துள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள அஹ்மதி ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். மார்க்கப் போதனைகளின்படி அமல் செய்யும் போதுதான் முன்னுரிமை வழங்கப்பட்டதாக கருதப்படும். (ஜுமுஆ குத்பா 13 ஜனவரி 2017)

சந்ததிகளுக்கு தர்பிய்யத் அளிப்பது என்பது முக்கியமான பொறுப்பாகும். குழந்தைப் பருவம் முதலேயே

பர்தா மற்றும் வெட்கம் குறித்த போதனையை வழக்கப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இது தொடர்பாக அஹ்மதி தாய்மார்களுக்கு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: எந்தத் தாய்மார்கள் தம் பிள்ளைகளின் உடை விஷயத்தில் குழந்தை பருவத்தில் இருந்தே கவனம் செலுத்த மாட்டார்களோ அவ்வாறான பிள்ளைகள் பெரியவர்களான பிறகும் அந்தத் தாய்மார்களால் அவர்களைக் காப்பாற்ற இயலாமல் போய் விடுகின்றது. சில சிறுமிகளின் உடல் வளர்ச்சி எவ்வாறு உள்ளது என்றால் 10, 11 வயதுடையவளாக இருந்தாலும் பார்ப்பதற்கு 14, 15 வயதுடையவள் போல் இருக்கிறாள். அவர்களுக்கு வெட்கம் மற்றும் உடை ஆகியவற்றின் பரிசுத்தத்தன்மையைக் குறித்து கற்றுக் கொடுக்கவில்லை என்றால் பெரியவர்களான பிறகு அவர்களிடத்தில் இந்த பரிசுத்தத்தன்மையை ஒருபோதும் உருவாக்க முடியாது! இன்னும் கூறுவதென்றால், ஒரு சிறுமி பெரிய பெண்ணாக தெரியவில்லை என்றாலும் கூட சிறு வயது முதலே பெண் பிள்ளைகளிடத்தில் வெட்க உணர்வை உருவாக்கவில்லை என்றால், அவர்களிடம், பாருங்கள்! நீங்கள் அஹ்மதி ஆவீர்கள். நீங்கள் இங்குள்ள மக்களின் அரைகுறை ஆடையின் பக்கம் செல்ல வேண்டாம். நீங்கள் உலகுக்கு வழிகாட்ட வேண்டியதுள்ளது. இறைவன் நமக்கு வழங்கிய போதனையின்படி நீங்கள் அமல் செய்ய வேண்டும். ஆகவே, இறுக்கமான ஜீன்ஸ் மற்றும் அதற்கு மேல் பகுதியில் சிறிய பிளவுஸ் போன்றவை அணிவது ஓர் அஹ்மதி பெண்ணுக்கு அழகை கொடுக்காது என்று இவ்வாறு புரிய வைத்தால், குழந்தைப் பருவத்தில் சிந்தனைகளில் இடப்படுகின்ற விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக தாக்கத்தை ஏற்படுத்தி விடும். பருவ வயதை அடைந்த பிறகு ஹிஜாப் அல்லது ஸ்கார்∴ப், நீளமான கோட் அணிவதன் பக்கம் தாமாகவே கவனம் பிறந்து விடும். இல்லையென்றால், பெண் பிள்ளைகளின் நிலைமை எவ்வாறு ஆகிவிடும் என்றால், பள்ளிவாசலுக்கு வரும்போதும் ஜமாஅத் நிகழ்ச்சிகளுக்கு வரும்போதும் தலையை மறைத்திருப்பார்கள். நல்ல உடையை அணிந்து இருப்பார்கள். ஆனால் வெளியே சுற்றும் போது தலையில் துப்பட்டாவும் இருக்காது. எந்த அளவுக்கென்றால், தலையிலிருந்து துப்பட்டா காணாமல் போயிருக்கும்! ஸ்கார்∴பை பற்றிய பேச்சுக்கே இடமிருக்காது. சில பெண் பிள்ளைகளின் நிலை இவ்வாறு உள்ளது. ஆகவே, தாய்மார்கள் தம் செயல் மூலமும் அறிவுரைகள் மூலமும் பெண் பிள்ளைகளுக்கு கவனமூட்டிக் கொண்டிருந்தால், நம் உடைகள் வெட்க உணர்வை கொண்டதாக இருக்க வேண்டும்; நமக்கென்று ஒரு தூய்மை உள்ளது என்று உணர்வூட்டிக் கொண்டிருந்தால் பல கசப்பான விஷயங்களில் இருந்து தாமும் தப்பித்துக் கொள்வார்கள். அவர்களின் பெண் பிள்ளைகளும் தப்பித்துக் கொள்வார்கள். நாம் நம் உணர்ச்சிகளின் சின்னச் சின்ன தியாகங்களுக்காக கூட தயாராக மாட்டோம் என்றால் பெரும் பெரும் தியாகங்களை எவ்வாறு செய்வோம்! (கனடா ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு 28 ஜூன் 2008)

வீடுகளிலும் கூட வெட்க உணர்வை கொண்ட உடைகளை அணிய வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: வீட்டில் ஜீன்ஸ் மற்றும் டி-ஷர்ட் அணிந்து கொள்ளலாம் அல்லது சிறிய பிளவுஸ் அணிந்து கொள்ளலாம். அதனால் எந்த வித்தியாசமும் வந்து விடாது. அதில் தவறேதும் கிடையாது. வீட்டை விட்டு வெளியே செல்லும்போது நீளமான கோட்டை அணிந்து கொள்ளலாம் என்று சில பெண் பிள்ளைகள் புரிந்து வைத்துள்ளார்கள். ஆனால் வீட்டில் தம் தந்தை மற்றும் சகோதரர்களுக்கு முன்னாலும் கூட எவ்வாறான உடையை அணிய வேண்டும் என்றால் அது வெட்க உணர்வைக் கொண்டதாகவும், பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு முன்னால் பர்தா அணிய வேண்டாம் என்று நிச்சயமாக அல்லாஹ் கூறி இருக்கிறான்தான்! ஆனால் வெட்க உணர்வை எந்நிலையிலும் ஈமானுடைய பகுதியாக இறைவன் ஆக்கியுள்ளான். வீட்டில் சில நேரத்தில் திடீரென்று ஏதேனும் உறவினர்களும் வந்து விடுகிறார்கள். தம் தந்தையர் அல்லது சகோதரர்களுக்கு முன்னாலும் திடீரென்று யாராவது வந்து விடும்போது அவர்களை எதிர் கொள்ள நேர்கிறது. ஆகவே அத்தகைய உடை அவர்களுக்கு முன்னால் பொருத்தமற்றதாக இருக்கின்றது. ஆகவே வீட்டிலும் கூட எவ்வாறான உடையை அணிய வேண்டும் என்றால், அது வெட்க உணர்வை உடையதாக இருக்க வேண்டும். (வீட்டில்) ஹிஜாப் அணிய வேண்டிய தேவை கிடையாது. தலையை மறைக்காமல் இருக்கலாம். அல்லாஹ்வின் மீதுள்ள நேசம் எதிர்பார்ப்பது என்னவென்றால், அவனுடைய கட்டளைகளின் படி அமல் செய்யப்பட வேண்டும் என்பதே! வெட்க உணர்வுள்ள உடை வீட்டுக்குள்ளும், வீட்டுக்கு வெளியேயும் அணிய வேண்டும். இது இறைவனுடைய கட்டளையாகும். வெட்க உணர்வை பூர்த்தி செய்வீர்கள் என்றால் பிறகு உங்களை யாரும் தடுக்க மாட்டார்கள். நீங்கள் டாக்டராகவும் ஆகலாம்! இன்ஜினியராகவும் ஆகலாம்! டீச்சராகவும் ஆகலாம்! அல்லது மனித குலத்திற்கு பயனளிக்கக்கூடிய எந்த ஒரு வேலைக்கும் செல்லலாம். நீங்கள் அதனுடன் முற்றிலும் சுதந்திரமானவர்களாக இருப்பீர்கள். ஒவ்வோர் அஹ்மதி பெண்ணுக்கும் ஒரு பரிசுத்தத்தன்மை உள்ளது. அதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். தம்முடைய பரிசுத்தத்தன்மையை கருத்தில் கொள்வது மற்றும் வெட்க உணர்வை வெளிப்படுத்துவது ஆகியவைதான் உங்களை நன்மைகளின் பக்கம் தூண்டக் கூடியதாகவும், தீமைகளை விட்டு தடுக்கக் கூடியதாகவும் உங்களை ஆக்கும். உங்களுடைய முன்மாதிரியே மற்றவர்களுக்கும், உங்களுடைய தோழிகளுக்கும் உங்களின் பக்கம் கவனத்தை திருப்புவதற்கும் காரணமாக அமையும். அதன் மூலமாக உங்களுடைய தப்லீகின் வழிகளும் திறக்கும். (ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு 2 ஜூன் 2005)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நார்வே நேஷனல் மஜ்லிஸே ஆமிலா உடன் நடந்த ஒரு மீட்டிங்கில் பர்தாவைக் குறித்து வழிகாட்டியவாறு கூறினார்கள்: வீடுகளில் பல்வேறு குடும்பங்கள் வந்து செல்வதுண்டு! ‘எங்களுக்கு அவர்களுடன் நீண்ட கால தொடர்புகள் உள்ளன. நாங்கள் நீண்ட காலமாக ஒருவர் மற்றவரை அறிவோம்’ என்று கூறுகிறார்கள். இது சரியானதல்ல! ஒருவர் மற்றவருடைய வீடுகளுக்கு

செல்லும்போது ஆண்கள் தனியாக அமர வேண்டும். பெண்கள் தனியாக திரைக்குப் பின்னால் அமர வேண்டும். சில சமயங்களில் நன்மையின் பெயரால் அனுதாபத்தின் பெயரால் மற்றவர்களுக்கு உதவி செய்தல் என்பதன் பெயரால் ஆணுக்கும் பெண்ணுக்கும் பரஸ்பர அறிமுகம் ஏற்பட்டு விடுகின்றது. சில சமயங்களில் அது தீய விளைவுகளுக்கு காரணமாக அமைந்து விடுகின்றன. ஆகவேதான், எந்த பெண்களின் கணவன்மார்கள் வீடுகளில் இல்லையோ அவ்வாறான பெண்களின் வீடுகளுக்கு செல்வதிலிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் தடை செய்து வந்துள்ளார்கள். அதற்கான காரணத்தைக் கூறும்போது, ஷைத்தான் மனிதனுடைய நரம்புகளில் இரத்தத்தைப் போன்று ஓடுகிறான் என்று கூறினார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதி பெண்களுக்கு வழிகாட்டல் வழங்கியவாறு மிகவும் நுட்பமான அறிவுரையைக் கூறுகிறார்கள்:

நீங்கள் புர்கா அணிந்து கொண்டு ஆண்களுடைய சபைகளில் அமர ஆரம்பித்து விட்டால், ஆண்களுடன் கை குலுக்க ஆரம்பித்து விட்டால் பர்தாவின் நோக்கமே மரணித்து போய் விடும்........ பர்தாவின் நோக்கம், அந்நிய ஆணும் பெண்ணும் பரஸ்பரம் வெளிப்படையாக சந்திக்க வேண்டாம் என்பதே ஆகும். இருவருக்குமான இடங்கள் தனித்தனியாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய தோழியின் வீட்டுக்குச் சென்று அவளுடைய கணவர் அல்லது சகோதரர்கள் அல்லது உறவுக்கார ஆண்களுடன் சுதந்திரமான சூழலில் அமர்ந்திருக்கிறீர்கள் என்றால் அது முகத்தை மறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாலும் சரி! அல்லது முகத்தை மறைத்துக் கொண்டு ஒருவருடன் கை குலுக்குகிறீர்கள் என்றாலும் சரி! இது பர்தா ஒன்றும் கிடையாது! (ஆண் பெண் ஆகிய) ஒவ்வொருவரின் சபையும் தனியாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கு என்றால், விபச்சாரிகளைப் போன்ற பெண்கள் அல்லது அசுத்தமான சிந்தனையைக் கொண்ட பெண்கள் ஆகியோரிடமும் பர்தா அணிய வேண்டும் என்று திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. அவர்களை விட்டும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டளை உள்ளது. ஆகவே முன்னெச்சரிக்கையாக இருங்கள்! இவ்வாறான சபைகளை விட்டு தப்பித்துக் கொள்ளுங்கள்!

**வீட்டில் தம் தந்தை மற்றும் சகோதரர்களுக்கு முன்னாலும் கூட எவ்வாறான உடையை அணிய வேண்டும் என்றால் அது வெட்க உணர்வைக் கொண்டதாகவும், பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு முன்னால் பர்தா அணிய வேண்டாம் என்று நிச்சயமாக அல்லாஹ் கூறி இருக்கிறான்தான்! ஆனால் வெட்க உணர்வை எந்நிலையிலும் ஈமானுடைய பகுதியாக இறைவன் ஆக்கியுள்ளான். வீட்டில் சில நேரத்தில் திடீரென்று ஏதேனும் உறவினர்களும் வந்து விடுகிறார்கள். தம் தந்தையர் அல்லது சகோதரர்களுக்கு முன்னாலும் திடீரென்று யாராவது வந்து விடும்போது அவர்களை எதிர் கொள்ள நேர்கிறது. ஆகவே அத்தகைய உடை அவர்களுக்கு முன்னால் பொருத்தமற்றதாக இருக்கின்றது. ஆகவே வீட்டிலும் கூட எவ்வாறான உடையை அணிய வேண்டும் என்றால், அது வெட்க உணர்வை உடையதாக இருக்க வேண்டும்.**

வெட்கம் மற்றும் பார்வையைத் தாழ்த்தும் பழக்கத்தை தமதாக்கிக் கொள்வதுடன் பெண்கள் தமது அழகையும் வெளிப்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு அறிவுரை கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒன்று, ஆண், பெண் ஆகியோரின் பார்வைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ள வேண்டாம் என்பதாகும். அவர்களிடத்தில் ஒரு வெட்க உணர்வு இருக்க வேண்டும். இரண்டாவது விஷயம் என்னவென்றால், தம் அழகை மறைத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறான உடையை அணிய வேண்டும் என்றால் அதன் மூலம் உடல் காட்சிப் பொருளாக ஆக்கப்படக் கூடாது. மூன்றாவது விஷயம், தம் அழகை மறைப்பதற்காக தமது கழுத்துப் பகுதி, தலை, கன்னம் மற்றும் முன்பகுதிகளை மூடி வைக்க வேண்டும். அணிகின்ற புர்கா தளர்வானதாக இருக்க வேண்டும். மேக்கப் செய்து விட்டு முகத்தைத் திறந்து வைத்து திரியக் கூடிய பெண்களும் அழகை வெளிப்படுத்தும் வட்டத்தில் வந்து விடுகிறார்கள். அதே போன்று கூந்தலைக் காட்சிப்படுத்தும் பெண்களும் அழகை வெளிப்படுத்தும் வட்டத்தில் வந்து விடுகிறார்கள். ஆகவே, தலையை மூட வேண்டும். குறைந்தபட்சம் முகத்தை எந்த அளவு மறைக்க வேண்டும் என்றால், முகம் காட்சிப் பொருளாக ஆக்கப்பட்டிருக்கக் கூடாது. பொருத்தமான உடையை அணிய வேண்டும். இது குறைந்தபட்ச பர்தாவாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதை வலியுறுத்திக் கூறும் போது, குறைந்தபட்சம் இந்த தரம் இருக்க வேண்டும் என்றார்கள். (யூ.கே ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு 30 ஜூலை 2010, அல் ∴பஸ்ல் இன்டர்நேஷனல் 11 மார்ச் 2011)

வெட்கம், நாணம் ஆகியவற்றை கருத்தில் கொண்டவாறு திருக்குர்ஆனுடைய கட்டளையான பர்தாவை மேற்கொள்வதுதான் ஓர் அஹ்மதி பெண்ணுடைய தனிச்சிறப்பாக இருக்க முடியும்!

இந்த முக்கியமான பொறுப்பின் பக்கம் ஜமாஅத்தினர்களுக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நம்பிக்கை கொண்ட ஒரு பெண்ணுக்கு அல்லாஹ்வின் மிக முக்கியமான கட்டளை ஒன்றும் உள்ளது. அது, தம் அழகை மறைத்துக் கொள்ள வேண்டும். பர்தா அணிய வேண்டும் என்பதாகும். சில படித்த பெண் பிள்ளைகளும், பெண்களும் சமூகத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி, அச்சத்தின் காரணமாக தற்காலத்தில்..... பர்தாவைக் கருத்தில் கொள்வது கிடையாது. அவர்களின் உடை ∴பேஷனை நோக்கி அதிகமாக சென்று கொண்டிருக்கின்றது. பள்ளிவாசலுக்குச் செல்லும் போதோ

அல்லது (தொழுகை) மையங்களுக்கு வரும் போதோ அதற்காக பர்தாவோ அல்லது நல்ல உடையையோ அணிந்து வந்து விடுகிறார்கள். ஆனால் கடைவீதிகளில் அவர்கள் தம் உடையைக் கருத்தில் கொள்வது கிடையாது என்று சில முறையீடுகள் வருகின்றன. ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! வெட்கம் என்பது ஈமானுடைய ஒரு பகுதியாகும். நாணம் என்பது பெண்களின் ஒரு கருவூலமாகும். ஆகவே எப்பொழுதும் வெட்க உணர்வுள்ள உடையை அணிந்து கொள்ள வேண்டும். எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! ஓர் அஹ்மதி பெண் மற்றும் அஹ்மதி சிறுமிக்கென்று ஒரு பரிசுத்த தன்மை உள்ளது. நீங்கள் அதை நிலைபெறச் செய்ய வேண்டும். எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! திருக்குர்ஆனில் அல்லாஹ் பர்தாவைக் குறித்து கட்டளையிட்டுள்ளான் என்றால், நிச்சயமாக அதற்கு ஏதேனும் முக்கியத்துவம் இருக்கும். இந்த மேற்கத்திய மக்களைப் போன்று ஆகிவிடாதீர்கள். பர்தாவின் கட்டளையோ பழமையானதாக ஆகிவிட்டது அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்காக மட்டுமே இருந்தது என்று அவர்கள் கூறுகிறார்கள். திருக்குர்ஆனின் எந்த ஒரு கட்டளையும் எப்பொழுதும் பழையதாக ஆகவும் செய்யாது; மாற்றவும் படாது! ஒரு காலத்தில் இவ்வாறான சிந்தனை -கள் தோன்றும் என்று அல்லாஹ்வுக்கு தெரியும்! ஆகவே தான் இந்த நிரந்தரமான கட்டளையை அவன் இறக்கியுள்ளான். நாவளவில் கூறுவதால் மட்டும் அல்லாஹ்வின் அடியார்களாக நீங்கள் ஆக முடியாது! மாறாக திருக்குர்ஆனில் என்ன அறிவுரைகள் செய்யப்பட்டுள்ளனவோ, என்ன கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளனவோ அவற்றின்படி செயல்பட்டால்தான் நம்பிக்கை கொண்ட பெண்கள் என்று உண்மையான முறையில் அழைக்கப்படுவீர்கள்! (ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு 1-9-2007, அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 2 செப்டம்பர் 2016)




ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தம்முடைய ஒரு சொற்பொழிவில் அஹ்மதி முஸ்லிம் பெண்களும் சிறுமிகளும் உண்மையான முறையில் வெட்கத்தையும் கற்பையும் பாதுகாக்க வேண்டும் என்று கவனமூட்டியவாறு மிகவும் அழகிய முறையில் இவ்வாறு கூறுகிறார்கள்: “நாங்கள் தலையை மறைத்து விட்டோம்; இது போதுமானது என்று சில பெண் பிள்ளைகள் கூறுகிறார்கள். ஆனால் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எவ்வாறு கட்டளையிட்டுள்ளார்களோ அவ்வாறு தலையை மறைத்திருப்பதில்லை. தலைமுடி தெளிவாக தெரிந்து கொண்டிருக்கும். தலை பாதி மூடி இருக்கும். பாதி திறந்திருக்கும். கழுத்து கூட தெரிந்து கொண்டிருக்கும். கோட் அணிந்திருப்பார்கள் என்றால் முழங்கை திறந்திருக்கும். முழங்கால்களுக்கு மேலே கோட் இருக்கும். இது ஓர் அஹ்மதி பெண்ணுடைய வெட்கமும் கிடையாது. அஹ்மதி பெண்ணுடைய சுதந்திரத்தின் வரம்பும் கிடையாது. மாறாக ஒரு பெண் இந்த வழிமுறையின் மூலமாகவும், இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வ -தாலும் தம் மானத்தின் மீது அவதூறுகளை சுமத்தக் கூடியவளாகவும் ஆகி விடுகிறாள். அவ்வாறே, ஓர் அஹ்மதி என்ற வகையில் தம் சுதந்திரத்தின் வரம்புகளையும் முறித்துக் கொண்டிருப்பாள்....... ஓர் அஹ்மதி பெண் மற்றும் ஓர் அஹ்மதி சிறுமியின் கற்பின் விலை ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மாணிக்கங்களை விடவும் அதிக மதிப்புள்ளதாகும். ஆகவே அதை பாதுகாக்க வேண்டியதும், பாதுகாப்பதற்கான வழிமுறையை அறிந்து கொள்ள வேண்டியதும் ஓர் அஹ்மதிப் பெண்ணுக்கு மிகவும் அவசியமாகும். இன்னும் கூறுவதென்றால், அது கடமையும் ஆகும். ஆகவே, எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! ஓர் அஹ்மதி சிறுமி அல்லது அஹ்மதி பெண் தம் வெட்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் தம் கற்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் தம் பரிசுத்தத்தை நிலை நாட்ட வேண்டும்....... இது கலாச்சாரம் கிடையாது. மாறாக இஸ்லாமிய போதனை ஆகும்....... இறையச்சத்தின் படி நடந்தவாறு தம் வாழ்வை கழிக்க வேண்டும். தமது மானம் மற்றும் கற்பை பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் அவள் உண்மையான அஹ்மதி முஸ்லிம் பெண் என்று அழைக்கப்படுவாள். இவ்விஷயம் எல்லாப் பெண்களிடத்திலும் பொதுவாக காணப்பட வேண்டும்...... ஒரு பெண் இறைவனுடைய நெருக்கத்தை விரும்புகிறாள் என்றால், தம் ஈமானை முழுமைப்படுத்த விரும்புகிறாள் என்றால் அவள் தம்முடைய பரிசுத்தத்தையும் குறிப்பாக கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஓர் அஹ்மதி பெண், காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டவாறு, எல்லாத் தீமைகளை விட்டும் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்வதாக உறுதிமொழி எடுத்துள்ளார். அவ்வாறிருக்கும் போது, அவள் தம் கண்ணியம், கற்பு மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றை மிகவும் அதிகமாக கருத்தில் கொள்ள வேண்டும்.”

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: கடை வீதிகளிலும் பொழுதுபோக்கும் இடங்களிலும் பர்தாவை கருத்தில் கொள்ளாமல் இருப்பது, ஆண்கள் பெண்கள் இருவரும் கலந்திருக்கும் பார்ட்டிகளில் பர்தா அணியாமல் செல்வது, cousin, class fellow மற்றும் அந்நிய ஆண்களுடன் தேவையற்ற நட்பு, வீணான தேவையற்ற நிகழ்ச்சிகளை பார்ப்பது, அவற்றில் கலந்து கொள்வது, ஜீன்ஸ் உடன் சிறிய பிளவுஸ் அணிவது, வெட்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக உடை அணிய வேண்டிய கட்டாயத்திற்காளாகும் இடங்களில் பணிபுரிவது, சினிமா படங்கள் பார்ப்பது, திருமணங்களில் ஆடுவது ஆகியவை (அனைத்தும்) ஷைத்தானின் தந்திரங்களாகும். அவை பெண்களிடமிருந்து அவர்களின் மானத்தை பறித்து அவளை அழகற்றவளாக ஆக்கி விடுகின்றது. (ஜுமுஆ குத்பா 9 அக்டோபர் 2011)

அஹ்மதி மாணவிகள் கல்விக்கூடங்களில் பர்தாவின் தரத்தை நிலை நாட்ட வேண்டும் என்று அறிவுரை வழங்கியவாறு ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: பெண்

பிள்ளைகள் பருவ வயதை அடையும்போது அவளைக் கவனத்தில் கொள்வது சமூகத்தின் பணியாகும். இஸ்லாம் ஹஜ்ஜைக் குறித்து கூறும்போது கூட, பெண் தனியாக செல்லக் கூடாது. மாறாக தனது மஹ்ரம் (அதாவது, அவளது கணவன் அல்லது அவளது தந்தை, மகன், சகோதரன் போன்ற திருமணம் முடிக்க ஹராமான ஆண்) -ஐ துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது. இன்னின்ன விஷயங்கள் தீமைகள் ஆகும் அவற்றிலிருந்து நீங்கள் தப்பிக்க வேண்டும் என்று சிறுமிகளுக்கு உணர்த்துங்கள். (ஜெர்மனி மாணவிகளுடன் சந்திப்பு 10 ஜூன் 2006)

இதே போன்று, பெண் பிள்ளைகள் மற்ற நகரங்களுக்குச் சென்று கல்வி கற்பது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தாய் தந்தையர் அனுமதி வழங்குகிறார்கள் என்றால் பிறகு எங்கு செல்ல வேண்டுமோ அங்கு எங்கு தங்குவது என்பதை பற்றி யோசிக்கலாம்! பெண் பிள்ளைகளுக்கு தனி ஹாஸ்டல் இருக்க வேண்டும். ஹாஸ்டல் தனியாக உள்ளது என்றால் சரி! அங்கு படிக்கும்போது தம்முடைய கண்ணியம் மற்றும் பரிசுத்த தன்மையைக் கவனத்தில் வைக்க வேண்டியது அவசியமாகும். பெற்றோர்களுக்கு திருப்தி இல்லை என்றால் பிறகு தம் பகுதிகளில் இருப்பதும், அங்கு படிப்பதும்தான் சிறந்ததாகும்! (ஜெர்மனி வாகி.்.பாத் நவ் வகுப்பு 18 அக்டோபர் 2011)

பர்தா ஏன் அவசியம் என்பதை குறித்து மாற்று மத நண்பர்களுக்கு நாங்கள் எவ்வாறு புரிய வைப்பது என்ற கேள்விக்கு பதில் அளிக்கும் போது ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: முதல் விஷயம், அல்லாஹ் வழங்கிய மார்க்கத்தின்படி செயல்படுவோம் என்று நாங்கள் உறுதி மொழி எடுத்துள்ளோம் என்று அவர்களிடம் கூறுங்கள். பர்தா அணியுங்கள். தன் மூலமாக உங்களுடைய sanctity (பரிசுத்த தன்மை) நிலைபெற்றிருக்கும் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான். சமூகத்தில் ஆண்களுடன் நான் அதிகமாக mixup ஆகிவிடக் கூடாது. எங்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் ஒரு barrier (தடை வேலி) வைக்க வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு இருந்து வர வேண்டும்.

அதே போன்று, தப்லீக் களத்தில் இஸ்லாமிய கட்டளையான பர்தாவை மேற்கொண்டவாறு எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று வழிகாட்டல் வழங்கியவாறு கூறினார்கள்: "இன்டர்நெட்டில் தப்லீக் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும் என்றால், பெண்கள் பெண்களுடன்தான் தப்லீக் தொடர்பை ஏற்படுத்த வேண்டும்."

ஹுஸூர் அவர்கள் பர்தாவின் முக்கியத்துவத்தையும் விவரித்தவாறு கூறுகிறார்கள்: எங்கேயாவது ஆண்களை தொடர்பு கொள்ள நேரிட்டால் அங்கு அவர்களுக்கு ஆண்களுடைய முகவரியைக் கொடுங்கள். உங்களுடைய இடங்களுக்குப் பெண்களை மட்டுமே அழைத்து வாருங்கள். எங்கேயாவது பெண்கள் முழுமையான முறையில் பதில் அளிக்க முடியவில்லை என்றால் mix gathering நடக்கிறது என்றால் உங்களுடன் அழைத்துச் சென்ற விருந்தாளி பெண்ணுடன் ஓரமாக ஒரு இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். அத்துடன் பர்தாவையும் கவனத்தில் கொள்ளுங்கள். ஆனால் உணவுக்கான நேரம் வரும்போது அந்நேரத்தில்

## போர் வேண்டாம்



போர் வேண்டாம் தலைவரே!
பல நூறு உயிரே போகுது
பூமியே சாம்பல் நிறப் பந்துபோல் ஆகுது
இரத்தம் ஆறுபோல ஓடுது
பூமியின் குழந்தைகளெல்லாம் அழுவது
வருங்கால சந்ததிகள் ஊனமாகுது.

போரை உடனடியாக நிறுத்து தலைவரே!
இதுதான் என்னுடைய கருத்து.

வருங்கால சந்ததியினருக்கு
ஊனம் ஏற்படாத வாழ்க்கையே
நீ அவர்களுக்கு தரும்
விருந்து தலைவரே!

போரை நிறுத்தி விட்டால் தேவையில்லை
மருந்து தலைவரே!
போரடித்தால் தொலைக்காட்சி
பார்க்கலாம் தலைவரே!
போர் தொடுத்தால் தொலைதொடர்பு
துண்டிக்கப்படும் தலைவரே!

தலைவரே! தலைவரே!
போர் வேண்டாம் தலைவரே!
தலைவரே! போர் வேண்டாம் தலைவரே!
தலைவரே! போர் வேண்டாம் தலைவரே!
தலைவரே! போர் வேண்டாம் தலைவரே!

தலைவரே!
அணுகுண்டு வீசினால்
அது பெரும் குற்றம் தலைவரே!
வெள்ளைக் கொடி காட்டினால்
சுற்றம் வரும் தலைவரே!

போர் வேண்டாம் என்று
குமுறுவது நான்தான் தலைவரே!
போர் மூண்டு விட்டால்
கதறுவது மக்கள்தான் தலைவரே!

இந்தப் பாரிலே
வேண்டவே வேண்டாம் போரே!
போர் வந்து விட்டால்
கிடைக்கவே கிடைக்காது சோறே!

போர் மூண்டு விட்டால்
கண்ணீரிலும் இரத்தத்திலும்
மூழ்கிவிடும் ஊரே!
ஆகவே போர் நிறுத்த பாடுபடு
நீவீரே! தலைவரே!

**- J. நூருத்தீன்**

mix gathering இல் அமர்ந்திருக்கக் கூடாது. மாறாக தனியாக enclosure (திரையிடப்பட்டு தடுக்கப்பட்டிருக்கும் பகுதி)-க்கு சென்று விடுங்கள். mix gathering-ல் சந்திக்கக் கூடிய பெண்களிடம் இருந்து முகவரியைப் பெற்று அவர்களை பெண்களுடைய சபைகளுக்கு மட்டுமே அழையுங்கள். ஆண்கள் பெண்கள் கலந்திருக்கும் சபைகளுக்கு நீங்கள் ஏன் வருவதில்லை என்ற கேள்வியும் அப்போது அவர்களின் சிந்தனைகளில் எழும். அந்நேரத்தில் நீங்கள் இஸ்லாமிய பர்தாவைக் குறித்து அவர்களிடம் இருக்கும் தப்பெண்ணங்-களையும் உங்களால் அகற்ற முடியும். (லஜ்னா இமாயில்லாஹ் ஜெர்மனி நேஷனல் மஜ்லிஸே ஆம்லா மீட்டிங் 9 ஜூன் 2006)

பெண்கள் வேலைக்கு செல்வது, பர்தா அணிவது தொடர்பாக வழிகாட்டியவாறு ஒரு குத்பாவில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண்..... இவ்வாறு கடிதம் எழுதியுள்ளார். 'எனக்கு வங்கியில் நல்ல வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அங்கு ஹிஜாபோ, பர்தாவோ அணிய கட்டுப்பாடு இருந்தால், கோட் அணிய கூட முடியாது என்றால் நான் அந்த வேலையை தொடரலாமா?........ வேலை செய்யக்கூடிய பெண்கள் வேலை செய்யும் இடத்தில் தம்முடைய புர்கா, ஹிஜாபை கழற்றி வைத்து விட்டு வேலை செய்யலாம் என்று நீங்கள் கூறியுள்ளதாக நான் கேள்விப்பட்டேன்' என்று எழுதியுள்ளாள்........ இந்த விஷயத்தை நான் ஏன் எடுத்துரைக்கிறேன் என்றால், இவ்வாறு ஒரு பெண் கிடையாது. பல பெண்கள் சார்பாக கேள்விகள் வருகின்றன. முதல் விஷயம், நான் அவ்வாறு கூறினேன் என்றால் அது மருத்துவர்களுக்காக கூறினேன். அங்கு சில கட்டாய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அங்கு முறையான புர்காவையோ அல்லது ஹிஜாபையோ அணிந்து கொண்டு வேலை செய்ய இயலாது. உதாரணமாக ஆபரேஷன் செய்யும் போது. அங்கு அவர்களுடைய ஆடை எப்படிப்பட்டதாக உள்ளது என்றால், தலை மீதும் தொப்பி இருக்கின்றது. Mask-ம் இருக்கின்றது. தளர்வான உடையும் இருக்கின்றது. அது மட்டுமின்றி டாக்டர்களும் கூட பர்தா அணிந்து கொண்டு வேலை செய்யலாம். ரப்வாவில் நம்முடைய பெண் மருத்துவர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் டாக்டர் ஃபஹ்மீதா. அவரை நான் எப்பொழுதும் பர்தாவில்தான் கண்டுள்ளேன். டாக்டர் நுஸ்ரத் ஜஹான் என்பவரும் இருந்தார். அவரும் எப்பொழுதும் முறையான பர்தாவை அணியக் கூடியவராக இருந்தார்...... ஒவ்வொரு வருடமும் புதிய கண்டுபிடிப்புக்கு ஏற்ப தம்முடைய தகுதியை அமைத்துக் கொள்வதற்கு அவர் இங்கு இலண்டனுக்கும் வந்து செல்வார். ஆனால் எப்பொழுதுமே பர்தாவில்தான் இருப்பார். எந்த அளவுக்கு என்றால், தேவையை விட அதிகமாக அவர்கள் பர்தாவை பேணக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் மீது இங்கு எந்த ஒரு நபரும் ஆட்சேபனை செய்யவில்லை. அவர்களின் வேலையின் மீதும் ஆட்சேபனை கிடையாது. பர்தாவின் காரணமாக அவர்களுடைய மருத்துவ பணியும் பாதிக்கப்படவில்லை. அவர்கள் பெரும் பெரும் ஆபரேஷன்களையும் செய்திருக்-கிறார்கள். எண்ணம் இருக்கும் என்றால், மார்க்க போதனைப்-படி செல்லக்கூடிய வழிகளும் திறந்து கொண்டே செல்லும்.

> பெண் பிள்ளைகள் மற்ற நகரங்களுக்குச் சென்று கல்வி கற்பது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தாய் தந்தையர் அனுமதி வழங்குகிறார்கள் என்றால் பிறகு எங்கு செல்ல வேண்டுமோ அங்கு எங்கு தங்குவது என்பதை பற்றி யோசிக்கலாம்! பெண் பிள்ளைகளுக்கு தனி ஹாஸ்டல் இருக்க வேண்டும். ஹாஸ்டல் தனியாக உள்ளது என்றால் சரி! அங்கு படிக்கும்போது தம்முடைய கண்ணியம் மற்றும் பரிசுத்தத் தன்மையைக் கவனத்தில் வைக்க வேண்டியது அவசியமாகும். பெற்றோர்களுக்கு திருப்தி இல்லை என்றால் பிறகு தம் பகுதிகளில் இருப்பதும், அங்கு படிப்பதும்தான் சிறந்ததாகும்!

ஒரு ஜுமுஆ குத்பாவில் ஹுஸூர் அவர்கள் இது தொடர்பாக அறிவுரை வழங்கியவாறு கூறுகிறார்கள்: "ஏதேனும் வகையில் சிக்கலில் சிக்கி அவதிப்படும் அஹ்மதிப் பெண்களுக்கும் நான் கூறிக் கொள்வது என்னவென்றால், உலக விஷயங்களைக் கண்டு அஞ்சி அல்லது ஃபேஷனில் மூழ்கி தம் ஹிஜாப் மற்றும் பர்தாவை கழற்றி விட்டீர்கள் என்றால் பிறகு உங்களுடைய கண்ணியத்திற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது! உங்களுடைய கண்ணியம் மார்க்கத்தின் கண்ணியத்துடன் இணைந்துள்ளது."

ஹுஸூர் அவர்கள் ஹிஜாபுடைய அருள் மற்றும் அல்லாஹ்வுடைய உதவி பற்றி ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: ஓர் அஹ்மதிப் பெண்ணிடம் அவளுடைய Boss, நீங்கள் ஹிஜாப் அணிந்து கொண்டு அலுவலகத்திற்கு வந்தால் வேலையை விட்டு நீக்கப்படுவீர்கள் என்று ஒரு மாத கெடு கொடுத்து நோட்டீஸ் அனுப்பினார். அந்த பெண் துஆ செய்தாள். அல்லாஹ்வே! நானோ உன்னுடைய கட்டளைக்கு ஏற்பவே பணியாற்று-கின்றேன். ஏதேனும் வழிவகையை ஏற்படுத்துவாயாக. இந்த வேலை எனக்கு நல்லதாக இல்லை என்றால் சரி! பிறகு வேறு ஏதேனும் சிறந்த ஏற்பாட்டை செய்வாயாக என்று துஆ செய்தாள். எவ்வாறிருப்பினும், ஒரு மாதம் வரை அந்த அதிகாரி அந்தப் பெண்ணுக்கு நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தார். இத்தனை நாட்கள்தான் எஞ்சியுள்ளன. அதற்குப் பிறகு நீ வேலையை விட்டு நீக்கப்படுவாய் என்று நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தார். இந்த பெண்ணும் துஆ செய்து கொண்டிருந்தாள். இறுதியில் ஒரு மாதத்திற்கு பிறகு இந்த பெண் தன் வேலையில் நிலைத்திருந்தாள். ஆனால் அந்த அதிகாரி செய்த ஒரு தவறின் காரணமாக அவருடைய உயர் அதிகாரி அவரை வேலையை விட்டு நீக்கி விட்டார் அல்லது வேறு ஒரு இடத்திற்கு அனுப்பி வைத்து விட்டார். இவ்வாறு அவளுடைய சிக்கல் தீர்ந்தது. எண்ணம் நல்லதாக இருக்கும் என்றால் அல்லாஹ் வழிவகைகளை ஏற்படுத்தி விடுகின்றான். அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கும் என்றால் இறைவன் எப்படிப்பட்ட வழிமுறைகளின் மூலமாக உதவி செய்கிறான் என்றால் அதைக் கண்டு மனிதன் வியப்படைந்து விடுகின்றான். தன்னையுமறியாமல் மனிதனுடைய உள்ளத்தில் அல்லாஹ்வைப் புகழ்ந்து சொற்கள் வெளிப்படுகின்றன. (ஜுமுஆ குத்பா 23 ஏப்ரல் 2010, அல்ஃபஸ்ல் இண்டர்நேஷனல் 14 மே 2010)

*(தொடர்ச்சி 17 ஆம் பக்கம்...)*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து
எஸ்ஸென்ஸ் ஆ:ப் இஸ்லாம்

4

தொகுதி 1

# தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்


அதிகாரம் 3

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

## தூய நபி (ஸல்) அவர்களின் மேலான தகுதி

முழுமையான மனிதனுக்கு அருளப் பெற்ற உயர் தகுதியுடைய அந்த ஒளி வானவர்களிலோ, நட்சத்திரங்களிலோ, சந்திரனிலோ, சூரியனிலோ, கடல்கள் மற்றும் நதிகளிலோ இருந்ததில்லை. மேலும் மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்து ஆகியவற்றிலும் அது இருந்ததில்லை. சுருக்கமாக, பூமி, வானம் ஆகியவற்றில் எப்பொருளிலும் அது இருந்ததில்லை. அது முழுமை பெற்ற மனிதனிடமே இருந்தது. இதற்கு மிக உயர்ந்த, மிக உன்னதமான, மிக முழுமையான முன்மாதிரியாகத் திகழ்ந்தவர் நம்முடைய தலைவரும், எஜமானரும், நபிமார்களின் தலைவரும், உயிரனங்களில் உயர்ந்தவரும், தேர்ந்தெடுக்கப்பட்டவருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களே ஆவார்கள். அந்த ஒளி இந்த மனிதருக்கு அருளப்பட்டது. பின்னர் அதே நிறத்தை சற்றேனும் கொண்டவர்களுக்கும் அவர்தம் தகுதிக்கு ஏற்ப அது வழங்கப்பட்டது........ இச்சிறப்பு உயர்வாகவும், முழுமையாகவும் நம் தலைவரும், எஜமானரும், வழிகாட்டியும், மாசற்ற நபியும், நேர்மையானவரும், நேர்மையாளர்களால் சாட்சி பகரப்பட்டவருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த:பா (ஸல்) அவர்களிடமே இருந்தது. (ஆயினே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 5, பக்கம் 160-162)

இந்த அரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது எனும் பெயருடைய நபி (ஆயிரமாயிரம் அருட்களும், சாந்தியும் அவர்கள் மீது உண்டாகட்டும்) எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட நபி ஆவார் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது. அவருடைய ஆன்மிகத் திறனைக் கணக்கிடுவது மனிதனின் வேலையன்று. பிரித்தறிய வேண்டிய முறையில் அவரின் உயர் பதவி பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே! உலகிலிருந்து மறைந்த ஏகத்துவத்தை (தவ்ஹீதை) மீண்டும் அதே உலகிற்கு கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே! அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தில் அவரது உயிரே




உருகி விட்டது. எனவே அவரின் உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் முன்னவர் பின்னவர் யாவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவரின் குறிக்கோள்களை அவரது வாழ்நாளிலேயே நிறைவேற்றினான்.

அவர்களே ஒவ்வோர் அருளின் தலையூற்று ஆவார்கள். அவர்களது அருளை அங்கீகரிக்காமல் எவராவது தமக்கு ஏதாவது ஒரு மேன்மை இருப்பதாக வாதிட்டால், அவர் மனிதர் அல்ல; மாறாக, ஷைத்தானின் சந்ததியாவார். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமே ஒவ்வொரு மேன்மையின் திறவுகோலும், ஒவ்வோர் அறிவின் பொக்கிஷமும் தரப்பட்டுள்ளது. எவர் அவர்களின் மூலமாக பெறவில்லையோ அவர் முற்றிலும் இழப்பிற்குரியவரே ஆவார். நான் ஒன்றுமில்லை; என்னிடம் எதுவுமில்லை. உண்மையான ஏகத்துவத்தை இந்த நபியின் மூலமாகவே நான் கற்றுக் கொண்டேன் என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை என்றால், நான் மிகவும் கெட்டவனாகி விடுவேன். இந்த முழுமை பெற்ற நபியின் மூலமாகவும், அவரது ஒளியின் மூலமாகவுமே உயிருள்ள இறைவனை நாம் அறிந்து கொண்டோம். இறைவனுடன் உரையாடுகின்ற மேன்மையும் அதன் மூலமாக அவனது முகத்தைக் காண்கின்ற நற்பேறும் இம்மாபெரும்

நபியின் மூலமாகவே எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நேர்வழியின் சூரியனின் ஒளிக்கற்றை என் மீது சூரிய ஒளி போன்று விழுகிறது. எதுவரை அதனை நோக்கி என்னை நான் வைத்துக் கொள்வேனோ, அதுவரை நான் தொடர்ந்து ஒளியூட்டப்படுகிறேன். (ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 118-119)

பூமியில் வாழும் மனித இனமே! மேற்கிலும் கிழக்கிலும் வாழும் மனித ஆன்மாக்களே! நான் மிக அழுத்தமாக இதனை அறிவிக்கின்றேன். அதாவது, இப்பொழுது பூமியில் உண்மையான நெறி இஸ்லாம் மட்டுமே ஆகும். திருக்குர்ஆன் கூறும் இறைவனே உண்மையான இறைவன் ஆவான். நிலையான ஆன்மிக வாழ்வைப் பெற்றுள்ள இறைத்தூதர், ஆற்றல் மற்றும் தூய்மை ஆகியவற்றின் அரியணையில் வீற்றிருக்கும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த∴பா (ஸல்) அவர்களே ஆவார்கள். அவர்களின் ஆன்மிக வாழ்விற்கும் அன்னாரது தூய்மையான கம்பீரத்திற்கும் சான்று என்னவெனில், அவர்களைப் பின்பற்றுவதாலும் அவர்களை நேசிப்பதாலும் நாம் பரிசுத்த ஆவியைப் பெறுபவர்களாகவும், இறைவனோடு உரையாடுதல் என்ற அருட்கொடையைப் பெறுபவர்களாகவும். விண்ணின் அடையாளங்களைக் காண்பவர்-களாகவும் ஆகி விடுகின்றோம். (தரியாகுல் குலூப், ரூஹானீ கஸாயின் தொகுதி 15 பக்கம் 141)




எந்த மனிதர் அவரது இருப்பிலும், அவரது பண்புகளி-லும், அவரது செயல்களிலும், அவரது ஆன்மீக மற்றும் தூய ஆற்றல்களின் மூலமாக அறிவு மற்றும் செயலிலும், நேர்மை மற்றும் உறுதிப்பாட்டிலும் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தினாரோ, மேலும் முழுமையான மனிதர் என்று அழைக்கப்பட்டாரோ, அவர் முஹம்மத் (அல்லாஹ்வின் சாந்தியும் அருட்களும் அன்னார் மீது உண்டாவதாக) அவர்களே ஆவார்கள்....

எந்த மனிதர் ஒரு மனிதன் என்ற நிலையிலும் ஓர் இறைத்தூதர் என்ற நிலையிலும் முழுமை பெற்று விளங்கினாரோ, எவர் எல்லா அருட்களுடனும் தோன்றினாரோ, எவர் ஆன்மிக மறுமலர்ச்சி மற்றும் உயிர் பெற்றெழுதல் மூலமாக மரணித்து விட்ட உலகை உயிர் பெறச் செய்து உலகில் முதலாவது நியாயத் தீர்ப்பினை வெளிப்பட வைத்தாரோ, அந்த அருளுக்குரிய நபி, நபிமார்களின் முத்திரை, நல்லடியார்களின் தலைவர், நபிமார்களின் கீர்த்தி முஹம்மத் முஸ்த∴பா (ஸல்) அவர்களே ஆவார்கள். எங்கள் இறைவனே! உலகின் ஆரம்பம் தொட்டு எவர் மீதும் நீ இறக்காத கருணையையும் அருட்களையும் நேசத்திற்குரிய இந்த நபியின் மீது இறக்குவாயாக! அந்த மாபெரும் நபி உலகில் தோன்றி இருக்காவிட்டால், யூனுஸ், அய்யூப், மர்யமின் மகன் ஈஸா, மலாக்கி, யஹ்யா, ஸக்கரியா போன்ற சிறிய நபிமார்களின் உண்மைக்கான எந்த சான்றும் நம்மிடம் இருக்காது. அவர்கள் நற்பேறு பெற்றவர்களாகவும், கண்ணியத்திற்குரியவர்களாக-வும், இறைவனது நேசத்தைப் பெற்றவர்களாகவும் இருந்த போதிலும், உண்மையான நபிமார்களாக அவர்கள் அனைவரும் இவ்வுலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்காக இந்த நபிக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்களே ஆவர்.

அல்லாஹ்வே! நீ உனது அருட்களை அன்னார் மீதும், அன்னாரது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் இறக்குவாயாக! நமது கடைசி வார்த்தை எல்லா உலகங்களையும் படைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது என்பதுவேயாகும். (இத்மாமுல் ஹுஜ்ஜா, ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 308)

நாம் நேர்மையுடன் நோக்கும்போது இறைத் தூதர்களின் முழு தொடரிலும், மிக துணிவு மிக்கவராகவும், உயிருள்ளவராகவும், இறைவனது பேரன்பிற்குரியவராகவும், நபிமார்களின் தலைவராகவும், இறைத்தூதர்களின் கீர்த்தியும் மகுடமும் ஆனவராகவும் ஒருவரையே காண்கிறோம். அவரது பெயர் முஹம்மத் முஸ்த∴பா (ஸல்) ஆகும். அன்னாருக்கு முன்னர் ஓராயிரம் வருடங்கள் பயணித்தாலும் பெற முடியாதிருந்த ஒளியினை, ஒருவர் அவர்களின் நிழலின் கீழ் பத்து நாட்கள் நடப்பதன் மூலம் பெற்று விட முடியும்...... இந்த தூய நபியினைப் பின்பற்றியதன் காரண-மாக நாம் ஒவ்வோர் ஒளியினையும் கண்டு கொண்டோம். எவர் அன்னாரைப் பின்பற்றுகிறாரோ அவரும் அதனைக் கண்டு கொள்வார். அவர் எந்த அளவுக்கு இறைவனால் ஏற்றுக் கொள்ளப்-படுவார் எனில், அவருக்கு சாத்தியமில்லாதது எதுவும் இராது. மக்களை விட்டும் மறைந்திருக்கின்ற உயிருள்ள இறைவன், அவரது இறைவன் ஆகி விடுவான். பிற அனைத்து பொய்த் தெய்வங்களும் அவரது காலின் கீழ் மிதிக்கப்படும். எல்லா இடங்களிலும் அவர் வாழ்த்தப்படுவார். தெய்வீக ஆற்றல் அவருடன் இருக்கும். நேர்வழியைப் பின்பற்றுபவர் மீது சாந்தி உண்டாகட்டும்! (ஸிராஜே முனீர், ரூஹானீ கஸாயின் தொகுதி 12 பக்கம் 82-83)

தற்போது வானத்தின் கீழ் ஒரே ஓர் இறைவேதமும் ஒரே ஓர் இறைத்தூதருமே உள்ளனர். அந்த இறைத்தூதர் முஹம்மத் முஸ்த∴பா (ஸல்) அவர்களே ஆவார்கள். அன்னார் எல்லா நபிமார்களை விடவும் மிக மேலானவரும், அனைத்து இறைத்தூதர்களிலும் மிக முழுமையானவரும், காத்தமுல் அன்பியாவும், மனிதர்களில் மிகச் சிறந்தவரும் ஆவார்கள். அன்னாரைப் பின்பற்றுவதன் மூலம் இறைவனை நாம் கண்டு கொள்கிறோம். இருளின் திரைகள் அகல்கின்றன. இவ்வுலக வாழ்விலேயே உண்மையான மீட்பின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அந்த இறைவேதம் திருக்குர்ஆனே ஆகும். அது உண்மையான முழுமையான வழிகாட்டுதலையும் மிகச் சிறந்த விளைவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன்

மூலமாக இறைவனைப் பற்றிய அறிவு பெறப்படுகிறது. மனிதப் பலவீனங்களிலிருந்து உள்ளம் தூய்மையடைகிறது. அறியாமை, கவனமின்மை, சந்தேகம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு ஒருவர் முழுமையான நிச்சய உறுதியின் கட்டத்தை அடைந்து விடுகிறார். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 557-558 அடிக்குறிப்பு 3)

தூய இயல்பினைக் கொண்ட இலட்சக்கணக்கான மக்கள் உலகில் வாழ்ந்துள்ளனர். இன்னும் அநேகர் எதிர்காலத்தில் தோன்றுவர். ஆனால் அவர்கள் அனைவரிலும் மிகச் சிறந்தவராகவும், மிகப் பெரிய இறை மனிதராகவும் ஒருவரையே கண்டுள்ளோம். அவரது பெயர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

اِنَّ اللّٰہَ وَمَلٰٓئِکَتَہٗ یُصَلُّوۡنَ عَلَی النَّبِیِّ ؕ یٰۤاَیُّہَا الَّذِیۡنَ اٰمَنُوۡا صَلُّوۡا عَلَیۡہِ وَسَلِّمُوۡا تَسۡلِیۡمًا

நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். வானவர்களும் (இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும் சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள். (33:57)

திருக்குர்ஆனில் எந்த தூய அடியார்களைக் குறித்து விரிவாகக் கூறப்படவில்லையோ அவர்களைக் குறித்து நாம் எதுவும் கூறப்போவதில்லை. எந்த நபிமார்களைக் குறித்து திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றதோ அவர்களைக் குறித்தே நமது கருத்தினை வெளியிடுகின்றோம். உதாரணமாக, மூஸா, தாவூது, ஈஸா மற்றும் பிற நபிமார்கள் (அவர்கள் அனைவர் மீதும் சாந்தி உண்டாவதாக!). இறைவனை சாட்சியாக்கி, ஆணையிட்டு நாம் இதனைக் கூறுகிறோம். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகில் தோன்றி இருக்காவிட்டால், திருக்குர்ஆன் அருளப்படாமல் இருந்தால், நாம் கண்டுணர்ந்த அருட்கொடைகளை நமது கண்களாலேயே நாம் கண்டிருக்காவிட்டால் கடந்த காலத்தில் தோன்றிய எல்லா நபிமார்களின் உண்மைத்துவமும் நமது கண்களுக்கு சந்தேகத்திற்குரியதாகவே இருந்திருக்கும்.




வெறும் கதைகளால் எந்த உண்மையையும் பெற முடியாது. ஏனெனில் அவை உண்மை அல்லாமல் இருப்பதற்கு சாத்தியம் உள்ளது. மேலும் அந்த நபிமார்களின் அற்புதங்களாக கூறப்படுபவை மிகைப்படுத்திக் கூறப்பட்டவையாக இருப்பதற்கு சாத்தியம் உள்ளது. முன்னர் அருளப்பட்ட வேதங்களிலிருந்து இறை இருப்பைக் குறித்தும் அல்லது அவன் மனிதனுடன் பேசுகிறான் என்பது குறித்தும் கூட நம்மால் உறுதியாக அறிந்து கொள்ள முடியாது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்தின் மூலமாக இந்த அனைத்து கதைகளும் உண்மையாகி விட்டன. இப்போது நாம் இறை உரையாடல் என்றால் என்ன என்பது குறித்தும், இறை அடையாளங்கள் எவ்வாறு தோற்றம் பெறுகின்றன மற்றும் துஆக்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பது குறித்தும் ஒரு கூற்றாக அல்லாமல் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டோம். இவை அனைத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால் நாம் கண்டு கொண்டோம். பிற மக்கள் கதைகளாகக் கூறுபவற்றையெல்லாம் நாம் கண்டிருக்கிறோம். நமக்கு இறைவனை தோற்றமளிக்கச் செய்த அந்த நபியுடன் நாம் நம்மை இணைத்துக் கொண்டோம். ஒரு கவிஞர் இவ்வாறு அழகாகக் கூறுகிறார்:

அரேபியாவின் முஹம்மத்; ஈருலகின் மன்னர்;
அவரது சன்னிதானம் தூய ஆவியால்
பாதுகாக்கப்பட்டுள்ளது.
நான் அவரை இறைவன் என்று கூற முடியாது;
ஆனால் நான் கூறுகிறேன்.
அவரை அறிவது இறைவனை அறிவதாகும்.

நாம் எவ்வாறு இறைவனுக்கு நமது நன்றியைத் தெரிவிப்பது! பருப்பொருட்களுக்கு ஒரு சூரியன் இருப்பது போன்று நல்லடியார்களின் ஆன்மாக்களுக்கு சூரியனாகத் திகழ்கின்ற ஒரு நபியைப் பின்பற்றுகின்ற நற்பேற்றினை அவன் நமக்கு வழங்கினான். அவர் இருளின் காலத்தில் தோன்றி, தமது ஒளியால் உலகை ஒளியூட்டினார். இறைவனுக்கு இணை வைத்தலை விட்டு முழு அரேபியாவையும் தூய்மையாக்கும் வரை அவர் களைப்படையவுமில்லை; சோர்வடையவுமில்லை. அவரது உண்மைக்கு அவரே சான்று ஆவார். ஏனெனில் அவரது ஒளி ஒவ்வொரு காலத்திலும் உள்ளது. அன்னாரிடம் உண்மையான கட்டுப்படுதலை மேற்கொள்வது, ஒரு நபரை ஓர் ஆற்றின் தூய கண்ணாடி போன்ற தண்ணீர் அழுக்கான துணியைத் தூய்மையாக்குவது பொல் தூய்மையாக்கி விடுகிறது. நம்மிடம் நேரிய உள்ளத்துடன் வந்த எவர்தாம் அந்த ஒளியைக் கண்டு கொள்ளவில்லை! நேர்மையுடன் அந்தக் கதவைத் தட்டிய எவருக்குதான் அது திறக்கப்படவில்லை? ஆனால் பரிதாபம் என்னவெனில், அநேகர் கீழான வாழ்வையே விரும்புகின்றனர். மேலான ஒளி அவர்களிடம் நுழைய வேண்டும் என்று அவர்கள் விரும்புவதில்லை. (சஷ்மயே ம∴ரி∴பத், ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 301-303)

(தொடரும்,,,)




2012-ஆம் ஆண்டு யூ.கே.- வில் நடைபெற்ற 9-வது அமைதிக் கருத்தரங்கில் ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹ் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து...

சமீபத்தில் ஊடகங்கள் வாயிலாக பரப்பப்பட்ட இன்னொரு செய்தி, இஸ்ரேல் நாட்டின் உளவுத் துறையான Mossad (மோசாது) என்பதன் ஓய்வு பெற்ற தளபதியின் கருத்தாகும். பிரபல அமெரிக்கத் தொலைக்காட்சியான CBS-க்கு அவர் அளித்த பேட்டியில், இஸ்ரேல் அரசு ஈரான் மீது போர் தொடுக்க விரும்பியது என்பது தெளிவாகத் தெரிகிறது எனக் கூறினார். மேலும் இத்தகைய தாக்குதல் நடந்தால் எங்கு? எப்படி? இந்தப் போர் முடியும் என்பதைக் கணித்துக் கூற முடியாது என்றும் அவர் கூறியிருந்தார். எனவே எந்தத் தாக்குதலும் தொடுக்கக் கூடாது என அவர் அறிவுரையும் கூறியிருந்தார்.

இது தொடர்பாக எனது கருத்து என்னவெனில், இத்தகைய போர் அணு ஆயுதப் பேரழிவில்தான் முடியும். சமீபத்தில் நான் ஒரு கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. அதில் அதன் ஆசிரியர் இன்றைய உலகின் நிலைமை பொருளாதார அளவிலும், அரசியல் அளவிலும் 1932-ஆம் ஆண்டின் நிலைமையை ஒத்திருப்பதாகக் கூறியிருந்தார். சில நாடுகளில் மக்கள் அவர்களது அரசியல்வாதிகளின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் நம்பிக்கையிழந்து விட்டனர். மேலும் பல ஒத்த, ஒப்புமையுடைய விஷயங்கள் எல்லாம் ஒன்றிணைந்து இரண்டாம் உலகப் போர் ஆரம்பிப்பதற்கு சற்று முன் இருந்த அதே நிலையைப் போன்று காட்சி தருகின்றது என்று அவர் கூறியிருந்தார்.

இந்த ஆய்வினை சிலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் நான் இதனை ஏற்றுக் கொள்கிறேன். எனவே உலக நாடுகளின் அரசுகள் மிகவும் கவலைப்பட வேண்டும்; இன்றைய நிலையைக் குறித்து அக்கறை கொள்ள வேண்டும் எனவும் நான் நம்புகிறேன். அதே போன்று என்ன ஆனாலும் சரி, பதவியைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நீதி -யற்ற சில முஸ்லிம் நாடுகளின் தலைவர்களும் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையெனில், அவர்களின் செயல்களும், அவர்களின் மூடத்தனமுமே அவர்களின் அழிவுக்குக் காரணமாகி விடும். மேலும் அவர்கள் தம் நாட்களை மிக பயங்கரமான நாசத்திற்கு இட்டுச் செல்வர்.

('உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும்' பக்கம் 74-75)

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹ் அவர்கள் 2012-ஆம் ஆண்டு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு அவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து...

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அவர் மீது சாந்தி உண்டாவதாக) அவர்களின் கலீ∴பா என்ற முறையில், இதை நான் எழுதுகிறேன். வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ், புனித முஹம்மது நபி (அல்லாஹ்வின் அருளும் சாந்தியும் உண்டாவதாக) அவர்களின் தொண்டராக அனுப்பப்பட்டுள்ளார்கள். புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா மனித குலத்திற்கும் அருட்கொடையாக, இஸ்ரவேலரின் சகோதரர்களிடம் மோசே (அவர் மீது சாந்தி உண்டாவதாக) அவர்களுக்கு ஒப்பாக அனுப்பப்பட்டுள்ளார்கள். (பைபிள் உபாகமம் 18:18 காண்க). எனவே இறைவனின் தூதுச் செய்தியை தங்களுக்கு நினைவூட்டுவது எனது கடமையாகிறது. இறைவனின் அழைப்பைக் கேட்டு, நேரான வழியை வெற்றிகரமாக அறிந்து கொண்டவர்களில் ஒருவராக நீங்களும் இருப்பீர்கள் என நான் நம்புகிறேன். நேரான பாதை என்பது வானங்கள், பூமி ஆகியவற்றின் எஜமானனாகிய மகத்தான இறைவனின் வழிகாட்டு -தலைக் கொண்ட பாதையாகும்.

நீங்கள் ஈரான் மீது போர் தொடுக்கப்போவதாக தற்போதைய செய்திகளின் வாயிலாக தங்களின் அறிக்கைகளை நாங்கள் கேள்விப்படுகிறோம். உலகப் போரின் பயங்கர விளைவுகள் உங்கள் கண் முன் உள்ளன. கடந்த உலகப் போரில் கோடிக்கணக்கான பாமர மக்கள் கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கான யூதர்கள் உயிரை இழந்து விட்டனர். பிரதமர் என்ற முறையில் நீங்கள் உங்கள் நாட்டினரின் உயிரைப் பாதுகாப்பது உங்களின் கடமையாகும். இப்போதுள்ள உலக சூழல் என்ன குறிப்பிபடுகிறது என்றால், ஓர் உலகப் போர் என்பது இரு நாடுகளுக்கிடையே

மட்டுமல்ல. மாறாக பெரும் கூட்டணிகள் உருவாகி விடும். உலகப் போர் உருவாகும் அச்சுறுத்தல் ஓர் அபாயகரமான ஒன்றாகும். அதன் காரணமாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களின் உயிர்கள் உடனடி ஆபத்தில் உள்ளன. இத்தகைய போர் நடக்குமானால் மனிதனின் அழிவிற்கான தொடர் விளைவுகளை ஏற்படுத்தும். இந்த அழிவின் விளைவுகளை எதிர்கால சந்ததியினர் அனுபவிப்பார்-கள். அவர்கள் குறைபாடு உள்ளவர்களாகவோ அல்லது உடல் ஊனமுற்றவர்களாகவோ பிறப்பார்கள். இந்தப் போரின் விளைவு சந்தேகத்திற்கிடமில்லாமல் அணு ஆயுதங்களைக் கொண்டே நடக்கும்.

எனவே எனது வேண்டுகோள் என்னவென்றால், உலகத்தை உலகப் போரின் பிடியில் கொண்டு செல்வதை விட. உலகத்தை உலகளாவிய அழிவிலிருந்து காப்பாற்ற இயன்ற அளவு முயலுங்கள். வேற்றுமைகளை பலவந்தத்தின் மூலமாக தீர்ப்பதை விட, அவற்றைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க நீங்கள் முயல வேண்டும். இதன் மூலம் நமது வருங்கால சந்ததியினருக்கு ஊனம் மற்றும் குறைபாடுகளை பரிசாக அளிப்பதை விட ஒளிமயமான எதிர்காலத்தை அவர்களுக்கு வழங்கலாம்.

('உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும்' பக்கம் 238-239)

**ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹ் அவர்கள் 2012-ஆம் ஆண்டு ஈரான் இஸ்லாமிய குடியரசின் உச்சத்தலைவர் ஆயதுல்லாஹ் கோமேனி அவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து...**

எல்லாம் வல்ல அல்லாஹ், ஈரானில் இஸ்லாத்தின் ஊழியம் செய்ய தங்களை வைத்துள்ளான். தற்போதைய ஈரானிய அரசும் தங்களின் பாதுகாப்பில் இயங்குகிறது. இஸ்லாத்தின் சரியான போதனைகளை உலகிற்கு, நம்மால் முடிந்த அளவுக்கு முயன்று தெரிவிக்க வேண்டும் என்பதையே இது எதிர்பார்க்கிறது. முஸ்லிம் என்ற முறையில், இந்த உலகை அமைதி, அன்பு மற்றும் நல்லிணக்கத்துடன் வாழ நாம் கடுமையாக முயன்று போதிக்க வேண்டும். குறிப்பாக முஸ்லிம் தலைவர்கள் உடனடியாக இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இதன் காரணமாக தாங்கள் தங்களது அரசின் கவனத்தை உலகில் அமைதியை ஏற்படுத்துவதில் பொறுப்புடன் திருப்ப வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும். ஈரான் தாக்கப்பட்டால், தனது நாட்டை தற்காத்துக் கொள்ள அதற்கு உரிமை இருக்கிறது. எப்படியிருப்பினும் அது ஆக்கிரமிப்பை ஆரம்பம் செய்யக் கூடாது. மேலும் அது எந்த மோதலிலும் முதலில் தனது அடியை முன்னால் வைக்கக் கூடாது. மாறாக, மத வேறுபாடுகளை நீக்கும்



வழிகளை மேற்கொண்டு பொது நலத்தில் ஒன்றுபட முயற்சி எடுக்க வேண்டும். இத்தகைய வழிமுறையையே இஸ்லாமிய வரலாற்றில் கடைபிடித்ததாக நாம் காண்கிறோம்.........

மனித குலத்தின் மீதான எனது அன்பும், எல்லா முஸ்லிம் உம்மத்தின் மீது வளர்ந்துள்ள அன்பும் மற்றும் மனித குலத்திற்கு அருட்கொடையாக வந்தவரின் உம்மத்தைச் சார்ந்த ஒருவனாக நான் இருப்பதும்தான் என்னை இந்தக் கடிதத்தை எழுதத் தூண்டியிருக்கிறது. அல்லாஹ் உலகத் தலைவர்களுக்கு எனது வார்த்தைகளைப் புரிய வைப்பானாக. மேலும் அவர்கள் உலக அமைதியை நிலைநாட்ட தங்களின் பங்கை உற்சாகத்துடன் ஆற்றுவார்களாக. இல்லையென்றால், ஏதாவது ஒரு நாட்டின் அவசரம் மற்றும் விளைவுகளைப் பற்றி கவலைப்படாத செயல், இரண்டு நாடுகளுக்-கிடையில் போர் ஏற்பட்டால், அந்த மோதல் அந்த நாடுகளுடன் மட்டும் முடிவுறாமல் அந்தப் போரின் தீப்பிழம்பு முழு உலகையும் சூழ்ந்து கொள்ளும். எனவே அது முழுவதும் நிகழக்கூடிய உலகப் போராக மூண்டு விடும். இந்தப் போர் பொதுவான ஆயுதங்களால் நடைபெறாது. மாறாக, அணு ஆயுதங்களால் நிகழும். அணு ஆயுதப் போரின் விளைவு எப்படிப்பட்ட பயங்கரமான பேரழிவை ஏற்படுத்தக் கூடியதென்றால், அதன் பின்விளைவுகள் அந்தக் காலத்தில் உலகில் வாழும் மக்களை மட்டும் பாதிக்காது. மாறாக நீண்ட கால விளைவுகள், எதிர்கால சந்ததியினர் குறைபாடுள்ள, ஊனமுற்றவர்களாக பிறக்கும் பயங்கர பரிசை அளிக்கும். இதன் காரணமாக எந்த நாடும் நிகழக்கூடிய அழிவிலிருந்து பாதுகாப்பாக உள்ளோம் எனக் கருதக் கூடாது.

எனவே மீண்டும் ஒருமுறை அல்லாஹ்வின் பெயராலும் அவனது தூதரின் பெயராலும் மனித குலத்தின் மீதுள்ள இரக்கம் மற்றும் அன்பினாலும் நான் தங்களை வேண்டுகிறேன். உலகில் அமைதி ஏற்பட உங்கள் பங்கை ஆற்றுங்கள்.

('உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும்' பக்கம் 301)

# பைஅத் மற்றும் தவ்பா

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பைஅத்தில் என்ன பலன் இருக்கிறது? மேலும் அதற்கான தேவை என்ன என்பதைப் பற்றி தெரிய வேண்டும். ஏதாவது ஒரு பொருளின் பயன் மற்றும் விலையை அறியாத வரை அதன் மதிப்பு கண்களுக்கு தென்படுவதில்லை. எவ்வாறு வீட்டில் மனிதனது பல்வேறு விதமான செல்வங்கள் மற்றும் பொருட்கள் இருக்கின்றன, உதாரணமாக ரூபாய், காசு, மதிப்பில்லாத நோட்டுகள், மரக்கட்டை போன்ற எந்த வகையான பொருளாக இருக்கிறதோ அதன் தரத்தைப் பொறுத்து அதற்கான பாதுகாப்பு அளிக்கப்படும். ரூபாய் மற்றும் காசின் பாதுகாப்பிற்காக அவன் எந்த ஏற்பாட்டை செய்வானோ அதை ஒரு பழைய நோட்டிற்காக செய்ய மாட்டான். மேலும் மரக்கட்டையையோ ஓர் ஓரத்தில் போட்டு விடுவான். இதே கோட்பாட்டின் அடிப்படையில், எதை இழப்பதால் அவனுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறதோ அதை மிக அதிகமாகப் பாதுகாப்பான். இதே போன்று பைஅத்தில் மகத்தான விஷயம் தவ்பா ஆகும். அதற்கான பொருள் திரும்புதல் என்பது ஆகும்- தவ்பா - இந்த நிலையின் பெயராகும். அதாவது மனிதன் தன்னுடைய பாவங்களில் இருந்து எதில் அவனுடைய தொடர்புகள் அதிகமாகி விட்டனவோ மேலும் எதை அவன் தன்னுடைய தாய்நாடாக உருவாக்கி விட்டானோ எதுவரை என்றால் பாவத்தில் அவன் தன்னுடைய தங்கும் இடத்தை உருவாக்கி விட்டான். பிறகு தவ்பாவின் பொருள் இதுவாகும். அதாவது தன்னுடைய தாய்நாட்டை விட்டு விடுவதாகும். மேலும் திரும்புதல் என்பதற்கான பொருள் தூய்மையைக் கடைப்பிடிப்பதாகும். இப்போது தாய் நாட்டை விடுவதென்பது மிகவும் கடினமானதாகும். மேலும் ஆயிரக்கணக்கான சிரமங்கள் ஏற்படுகின்றன. ஒரு வீட்டை மனிதன் விடும்போது எந்த அளவுக்கு அவனுக்கு துயரங்கள் ஏற்படுகின்றன. மேலும் தாய் நாட்டை விடுவதில் அவனுக்கு எல்லா நண்பர்களை விட்டும் பிரிய வேண்டியதாக இருக்கிறது. மேலும் எல்லா பொருட்களையும் உதாரணமாக தரை, கட்டில், அண்டை வீட்டார், தெருக்கள் மற்றும் சந்தைகள் ஆகிய எல்லாவற்றையும் விட்டு விட்டு ஒரு புதிய நாட்டிற்குச் செல்ல வேண்டியதாய் இருக்கிறது. அதாவது அவன் திரும்ப தாய் நாட்டிற்கு வரமாட்டான். அதன் பெயரே தவ்பா ஆகும். பாவத்தின் நண்பர்கள் வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். மேலும் தக்வாவின் நண்பர்கள் வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். இந்த மாறுதலையே சூ.ஃபிகள் மரணம் என்கிறார்கள். எவர் தவ்பா செய்கிறாரோ அவர் பெரிய இடையூறுகளைச் சந்திக்கிறார். மேலும் உண்மையான தவ்பாவின் போது பெரிய பெரிய இன்னல்கள் அவருக்கு முன்னால் வருகின்றன. அல்லாஹ் மிகுந்த கருணையாளன் ஆவான். அவன் அதற்குரிய சிறந்த பரிசை அளிக்காத வரை அவனை அழிப்பதில்லை.

“தன் பக்கம் திரும்புபவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்; மேலும் (அகமும் புறமும்) தூய்மையாக இருப்பவர் -களையும் நேசிக்கின்றான்” (அல்பகரா: 223) என்ற இந்த வசனத்தில் இதுவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது அவன் தவ்பா செய்து ஏழையாக, ஆதரவில்லாதவனாக ஆகி விடுகிறான். இதனால் அல்லாஹ் அவரோடு அன்பு செலுத்துகிறான். மேலும் அவரை நல்லவர்களின் ஜமாஅத்தில் நுழையச் செய்கிறான். மற்ற சமுதாயங்கள் இறைவனைக் கருணையாளனாக எண்ணுவதில்லை. கிறிஸ்த -வர்கள் இறைவனையோ அநீதியாளனாகவும் மேலும் மகனைக் கருணையாளனாகவும் எண்ணுகிறார்கள். அதாவது தந்தையோ பாவத்தை மன்னிக்கவில்லை. மேலும் மகன் தன்னுடைய உயிரைக் கொடுத்து மன்னிக்க வைத்தார். தந்தை மகனிடையில் இவ்வளவு வித்தியாசம் இருப்பது பெரும் அறிவின்மை ஆகும். தந்தை மகனின் பழக்கவழக்கங்கள் ஒத்தவையாக இருக்கின்றன. (ஆனால் இங்கோ முற்றிலும் இல்லை) ஒருவேளை அல்லாஹ் கருணையாளனாக இருக்கவில்லை என்றால் பிறகு மனிதனால் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது. எவன் மனிதனைப் படைப்பதற்கு முன்னர் ஆயிரக்கணக்கான பொருட்களை அவனுக்காக பயனுள்ளதாக ஆக்கினானோ அந்த இறைவன், தவ்பா மற்றும் செயலை ஏற்க மாட்டான் என்று எவ்வாறு சந்தேகம் கொள்ள முடியும்?

(மல்.ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 2)

*(10 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

இறுதியாக நான் உங்களுக்கு முன்னால் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், எல்லா வகையான ஷைத்தானிய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்கும் நன்மையின் வழிகளில் நிலைபெற்றவாறு வாழ்வைக் கழிப்பதற்கும் துஆ மிகவும் அவசியமானதாகும். அஹ்மதி பெண்கள் துஆக்களின் உதவியுடன் அல்லாஹ்வின் கட்டளையைப் பேணி நடக்க வேண்டும் என்று கவனமூட்டியவாறு ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும் என்ற கட்டளை உள்ளது. ஆகவே ஒவ்வோர் அஹ்மதி ஆணும், பெண்ணும் துஆ கேட்க வேண்டும். அல்லாஹ்வே! நீ நேர்வழியை வழங்கி இருக்கிறாய் என்றால் அதில் நிலைத்திருக்கக்கூடிய வாய்ப்பையும் தருவாயாக! ஷைத்தானிய எண்ணங்கள் என் மீது மிகைத்து விடாமல் பார்த்துக் கொள்வாயாக என்று துஆ கேட்க வேண்டும். இது நடந்து விட்டால், உலக இன்பங்கள், உலக ஃபேஷன் அல்லது நாம் உலகத்திற்கு ஏற்ப நடப்பது. உலகம் நம்மை பார்த்து என்ன கூறும் என்ற தாழ்வு மனப்பான்மை போன்றவை அனைத்தும் மதிப்பற்றதாக ஆகி விடும். மார்க்கமும் ஜமாஅத்தும் முன்னுரிமை பெற்று விடும். ஓர் அஹ்மதி பெண் தம் மானத்தை பாதுகாக்க கூடியவளாக ஆகிவிடுவாள். தன்னுடைய புகைப்படம் இதழ்களில் அச்சாகி விட்டால் அதனால் என்ன ஆகிவிடப் போகிறது என்ற எண்ணம் அவளுக்கு ஒருபோதும் வராது. மாறாக, இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என்ற அல்லாஹ்வின் கட்டளையான பர்தா அவளை இதிலிருந்து தடுத்து விடும். அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையிலும் ஏதேனும் ஒரு நுட்பமும் உள்ளது. பர்தா குறித்த கட்டளையும் கூட, தம் வெட்கத்தை பேண வேண்டும் என்ற கட்டளையும் கூட திருக்குர்ஆனுடைய கட்டளைகளில் ஒரு கட்டளை ஆகும். ஆகவே, எவ்வாறிருப்பினும் நான் எனது மானத்தை எனது பர்தாவை பாதுகாக்க வேண்டும். இறைவனுடைய ஒவ்வொரு கட்டளையின்படியும் அமல் செய்ய வேண்டும் அல்லது அமல் செய்ய முயற்சிக்க வேண்டும் என்ற சிந்தனை தோன்றி விடும்...... இந்த சிந்தனையுடன் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆணும் வாழ்வை கழிப்பதற்கு முயற்சி செய்யும்போது, ஷைத்தானிய மற்றும் உலக எண்ணங்களில் இருந்து காப்பாற்றுவதற்கு இது உத்தரவாதம் அளிக்கக் கூடியதாக ஆகி விடுகிறது.....

اَللّٰهُ وَلِيُّ الَّذِيْنَ اٰمَنُوْا

'நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ் நண்பனாக இருக்கிறான்.' அல்லாஹ் யாருக்கு நண்பனாக ஆகி விடுவானோ அவரிடம் ஷைத்தான் வருவதற்கான பேச்சுக்கே இடமில்லை! (யூ.கே ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு 8 செப்டம்பர் 2012,அல்.ஃபஸ்ல் இண்டர்நேஷனல் 30 நவம்பர் 2012)


திருக்குர்ஆன், முழுமையான வழிகாட்டியான ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் கலீ.ஃபத்துல் மஸீஹ் அவர்களின் அனைத்து வழிகாட்டல்கள்படியும் அமல் செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக! பர்தாவின் உண்மையான பொருளைப் புரிந்து கொண்டு அதன்படி செயல்படக் கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆமீன்!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் உங்களுடைய விருப்பத்தை விட்டு விடாமல் இறைவனுடைய விருப்பத்தை ஒருபோதும் பெற முடியாது. உங்களுடைய இன்பத்தை விட்டுவிட்டு உங்களுடைய கண்ணியத்தை விட்டுவிட்டு உங்களுடைய செல்வத்தை விட்டுவிட்டு உங்களுடைய உயிரை விட்டுவிட்டு அவனுடைய வழியில் எல்லாவிதமான கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு அது மரணத்திற்கு ஒப்பானதாக உங்களுக்கு முன்னால் தென்பட வேண்டும். ஆனால் நீங்கள் கஷ்டத்தை சகித்துக் கொண்டீர்கள் என்றால் ஒரு நேசத்திற்குரிய குழந்தையைப் போன்று இறைவனுடைய மடியில் வந்து விடுவீர்கள். மேலும் உங்களுக்கு முன் வாழ்ந்த அந்த இறைநேசர்களுடைய வாரிசுகளாக ஆகி விடுவீர்கள். மேலும் ஒவ்வோர் அருளின் கதவும் உங்களுக்காகத் திறக்கப்படும். ஆனால் நீங்கள் உங்களுடைய ஆன்மாவினால் உண்மையில் மரணம் அடைந்து விட்டீர்கள் என்றால் அப்போது உங்களில் இறைவன் வெளிப்படுவான். இறைவன் உங்களுடன் இருப்பான். மேலும் நீங்கள் வசிக்கின்ற வீடு அருளுக்குரியதாக ஆகிவிடும். மேலும் அதனுடைய சுவர்களின் மீது இறைவனுடைய ரஹ்மத்துகள் இறங்கும். அது உங்களுடைய வீட்டின் சுவர்களாக இருக்கும். மேலும் அவ்வாறான நபர்கள் வாழும் நகரம் அருளுக்குரியதாக இருக்கும்.

(அல் வஸிய்யத், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 308)

# வக்ஃபே நவ் இஜ்திமா யூ.கே. 2025



***அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 27 ஏப்ரல் 2025 அன்று ஆற்றிய உரை***

**தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்**

இன்று, அல்லாஹ்வின் அருளால், நீங்கள் தேசிய வக்ஃபே நவ் இஜ்திமாவில் கலந்து கொண்டிருக்கின்றீர்கள், மேலும் இந்த இஜ்திமாவில் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் உங்கள் அனைவருக்கும் பயனளித்திருக்கும் என்று நான் நம்புகிறேன், மேலும் அதற்காக பிரார்த்திக்கிறேன் - அல்ஹம்துலில்லாஹ், இங்கிலாந்தில் மட்டும், வாகிஃபீனே நவ் எண்ணிக்கை இப்போது ஆயிரக்கணக்கில் உள்ளது. அதே நேரத்தில், இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான வக்ஃபீன்கள் இருப்பது அனைத்து வாகிஃபீன்களும் தங்கள் பொறுப்புகளையும் ஜமாஅத்தின் தேவைகளையும் உண்மையில் நிறைவேற்றினால் மட்டுமே பயனளிக்கும். ஒவ்வொரு ஆண்டும், ஒரு சில வக்ஃபே நவ் சிறுவர்கள் ஜாமிஆவிற்குள் நுழைந்து பிரச்சாரகர்களாக பயிற்சி பெறுகிறார்கள். அதே போல், ஒரு சிலர் ஜமாஅத்திற்கு தேவைப்படும் துறைகளில் தகுதி பெறுகிறார்கள். உதாரணமாக, நமது ஜமாஅத் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளுக்கு மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள். எவ்வாறிருந்தாலும், வாகிஃபீனே நவ்வில் பெரும்பாலான இளைஞர்கள் தங்கள் கல்வியை முடித்து விட்டு இப்போது பணி செய்கிறார்கள் அல்லது சொந்தமாகத் தொழில் செய்கிறார்கள்.

அத்தகைய வாகிஃபீன்கள் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும், அவர்கள் ஜமாஅத்துக்கு என்ன நன்மையை வழங்குகிறார்கள்? அவர்கள் உண்மையிலேயே தங்கள் வக்ஃப்பை நிறைவேற்ற விரும்பினால், அவர்கள் தங்கள் உறுதிமொழியின் உண்மையான அர்த்தத்தையும் கோரிக்கைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். எளிமையான சொற்களில், உங்கள் உறுதிமொழி, ஜமாஅத்திற்கு எந்த வழியில் அல்லது திறனில் தேவைப்படுகிறதோ, அந்த வழியில் நீங்கள் உண்மையாக சேவை செய்ய வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றது. நீங்கள் ஜமாஅத்திற்கு வெளியில் வேலை செய்தாலும், உங்கள் உலக வேலைவாய்ப்புடன், ஜமாஅத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உங்கள் சொந்த ஆன்மிக வளர்ச்சிக்கும் போதுமான நேரத்தையும் முயற்சியையும் அர்ப்பணிப்பதை உறுதி செய்ய வேண்டும். எனவே, உலகப் பணிகளில் ஈடுபடும் வாகிஃபீனே நவ் பணம் சம்பாதிப்பதில் அல்லது தொழில் முன்னேற்றத்தில் மட்டுமே கவனம் செலுத்தக் கூடாது.

மாறாக, அவர்களின் முன்னுரிமை அவர்களின் ஆன்மிக மற்றும் தார்மீக தரங்களை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். ஒருவரின் வாழ்க்கையை அவர்களின் நம்பிக்கைக்காகவும் அதன் தேவைகளுக்காகவும் அர்ப்பணிப்பதன் மதிப்பு பற்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக விரிவாக எழுதியுள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "எனது சமூகத்திற்கு அறிவுரை கூறுவதும், இந்த செய்தியை அவர்களுக்கு தெரிவிப்பதும் ஒரு கடமையாக நான் கருதுகிறேன், மேலும் ஒவ்வொரு நபருக்கும் இதைக் கவனிப்பதற்கு அல்லது புறக்கணிப்பதற்கான சுதந்திரம் இருக்கிறது. உங்களில் யாராவது இரட்சிப்பையும், தூய்மையான மற்றும் நிலையான வாழ்க்கையையும் விரும்பினால், நீங்கள் உங்கள் வாழ்க்கையை அல்லாஹ்வுக்காக அர்ப்பணிக்க வேண்டும்"

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: "உங்கள் வாழ்க்கை, உங்கள் மரணம், உங்கள் தியாகங்கள், உங்கள் பிரார்த்தனைகள் அல்லாஹ்வுக்காக மட்டுமே என்று நீங்கள் சொல்லக்கூடிய நிலையையும் தரத்தையும் அடைவதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் பாடுபடுங்கள் மற்றும் ஆர்வத்துடன் முயற்சி செய்யுங்கள். மேலும் இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) போலவே, உங்கள் ஆன்மாவும், நான் உலகங்களின் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தேன் என்று அறிவிக்கட்டும்." (திருக்குர்ஆன் 2:132).

தொடர்ந்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "ஒரு நபர் இறைவனிடம் முழுமையாக மூழ்கி, இறை வழியில் தனது உயிரைத் தியாகம் செய்யாத வரை, அவர்களுக்கு ஒரு புதிய இருப்பு வழங்கப்படாது. எனவே, என்னுடன் இணைந்த நீங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்காக என் வாழ்க்கையை அர்ப்பணிப்பதை நான் என் இருப்பின் அடிப்படை நோக்கமாகக் கருதுகிறேன் என்பதை அங்கீகரிக்க வேண்டும்."

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:: "அதன்படி, நீங்கள் அனைவரும் உங்கள் ஆன்மாக்களை ஆழமாகப் பார்த்து, என்னுடைய இந்தச் செயலை நீங்களே விரும்புகிறீர்களா என்று பாருங்கள். மேலும் உங்கள் வாழ்க்கையின் அர்ப்பணிப்பு மற்றும் இறைவனின் பாதையில் அர்ப்பணிப்பை நேசிக்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த

ஆழமான வார்த்தைகள் அனைத்து அஹ்மதிகளுக்கும் உரியவையாகும், ஆனால் வக்ஃபே நவ் திட்டத்தின் உறுப்பினர்களாகிய உங்களுக்கு குறிப்பாகப் பொருந்தும். உண்மையில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வார்த்தைகள் அல்லாஹ்வுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த ஒவ்வொரு நபரின் முதுகெலும்பிலும் ஒரு நடுக்கத்தை ஏற்படுத்த வேண்டும், ஏனெனில் இறைவனுக்காக ஒருவரின் வாழ்க்கையை அர்ப்பணிப்பது சிறிய அல்லது அற்பமான விஷயம் அல்ல என்பதை அவை வெளிப்படுத்துகின்றன.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "ஹஸ்ரத் இப்ராஹிம் (அலை) அவர்களின் வழியில் ஒவ்வொரு வாழ்வை அர்ப்பணித்தவரும் தங்கள் உறுதிமொழியை மதிக்க வேண்டும். அவர்கள் தனது செயல்களின் மூலம் அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிதலுடனும் உண்மையுடனும் இருந்தார்கள் என்று அறிவித்தார்கள். எனவே, உங்கள் உறுதிமொழியின் தேவைகளை உறுதிமொழியின் எதிர்பார்ப்புகளை நீங்கள் நிறைவேற்றுகிறீர்களா என்பது குறித்து உங்கள் உள்ளங்கள் எப்போதும் விழிப்புடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும். நீங்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து, அவனுக்காக மட்டுமே ஆகும்போதுதான், அவனது இறை வணக்கத்தின் உரிமைகளை நீங்கள் நிறைவேற்று -வீர்கள். பின்னர் அவசரமாக தொழுவதற்கு பதிலாக, நீங்கள் தொழுகைகளை முழுமையான கவனத்துடனும், பணிவுடனும் மற்றும் அர்ப்பணிப்புடனும் தொழுவீர்கள்.

அதே போல், நீங்கள் தினமும் திருக்குர்ஆனை ஓதி அதன் கட்டளைகளின்படி செயல்படுவீர்களென்றால், ஜமாஅத்தின் நூல்களை, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களைப் படிப்பதன் மூலம் உங்கள் மார்க்க அறிவை அதிகரிக்க முயற்சிப்பீர்கள் என்றால், அப்போதுதான் உங்கள் வக்ஃபின் உரிமைகள் மற்றும் எதிர்ப்பார்ப்புகளை நீங்கள் நிறைவேற்றுவீர்கள். அப்போது தான் உங்கள் வக்ஃப் சுய சீர்திருத்தத்திற்கான ஒரு வழிமுறையாக நிரூபிக்கப்படும். அப்போதுதான் உலகம் முழுவதும் இஸ்லாத்தின் போதனைகளைப் பரப்புவதில் நீங்கள் வெற்றி பெற முடியும். நிச்சயமாக, நீங்கள் இஸ்லாத்தின் உண்மையுள்ள ஊழியர்களாக இருந்தால், இஸ்லாத்தின் செய்தி மற்றும் போதனைகள் உலகின் அனைத்து மக்களையும் நாடுகளையும் சென்றடையும் வரை நீங்கள் ஒருபோதும் எளிதாக ஓய்வெடுக்க முடியாது. அல்லாஹ்வின் அருளால், பெண்கள் மற்றும் ஆண் வக்ஃபே நவ்களின் எண்ணிக்கை உலகளவில் 100,000ஐ நெருங்குகிறது, மேலும் அனைத்து வாகிஃபீன்களும் நோக்கத்தில் ஒன்றுபட்டு, இஸ்லாத்திற்காக சாத்தியமான ஒவ்வொரு தியாகத்திற்கும் தயாராக இருப்பதற்கான உறுதிமொழியை முழு மனதுடன் நிறைவேற்றினால், தங்கள் அனைத்து திறன்களையும் தங்கள் நம்பிக்கைக்கு சேவை செய்ய பயன்படுத்தினால், இன்ஷா அல்லாஹ் உலகில் ஒரு மகத்தான தார்மீக மற்றும் ஆன்மிக மாற்றத்தைக் காண்போம் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

ஆனாலும், இதை அடைவதில் இருந்து நாம் வெகு தொலைவில் இருக்கிறோம். மாறாக, உலகம் முழுவதும், மனிதகுலம் பொருள் ஆசைகள் மற்றும் ஏமாற்றும் பளபளப்புகளின் கனமான சங்கிலிகளால் பிணைக்கப் -பட்டுள்ளது. ஒழுக்கக்கேடு, தீய நடத்தை மற்றும் ஊழல் ஆகியவை நவீனகால சமூகத்தைப் பாதித்துள்ளன. மேலும், உலகின் அமைதியும் பாதுகாப்பும் சிதைந்துள்ளன. பல நாடுகளுக்குள்ளும், சர்வதேச அளவிலும், பொறாமை, வெறுப்பு மற்றும் பகைமையின் ஒரு கொழுந்து விட்டெரியும் நெருப்பு இடைவிடாமல் எரிகிறது. துரதிர்ஷ்டவசமாக, நீதிக்கு எந்த அடிப்படையும் இல்லாத, பணக்காரர்கள் மற்றும் சக்திவாய்ந்தவர்களின் சுயநல மற்றும் தீய நோக்கங் -களுக்காக மட்டுமே போராடப்படும் போர்கள் மற்றும் மோதல்களில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுகி -றார்கள். இதுபோன்ற சூழ்நிலைகளில், நேற்று வாகிஃபாத்தே




நவ்விடம் நான் சொன்னது போல், உங்கள் ஆற்றலையும் நோக்கத்தையும் நீங்கள் ஒருபோதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. வக்ஃபே நவ்வாக, உலகில் ஒரு ஆன்மிக மற்றும் தார்மீக புரட்சியைக் கொண்டு வரும் பணி உங்களிடம் உள்ளது. நிச்சயமாக, அல்லாஹ்வின் உதவியுடன், நீங்கள் இதை அடைய முடியும், ஆனால் இஸ்லாத்தின் அழகான போதனைகளை உலகம் முழுவதும் பரப்புவதற்கான உங்கள் உறுதிமொழியை நீங்கள் உண்மையாக நிலைநிறுத்தினால் மட்டுமே இதை அடைய முடியும்.

நீங்கள் ஜமாஅத்தின் முழுநேர சேவையில் சேர்ந்திருந்தாலும் இல்லாவிட்டாலும், இதுவே உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதன்படி, வாகிஃபீனே நவ்வாக, நீங்கள் எங்கிருந்தாலும் அல்லது எந்த வேலை செய்தாலும், ஜமாஅத்தின் சேவைக்காக நீங்கள் வழக்கமான நேரத்தை அர்ப்பணிக்க வேண்டும். நான் வாசித்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வார்த்தைகள் அனைத்து அஹ்மதிகளுக்கும் கூறப்பட்டிருந்தாலும், வக்ஃப்வே நவ்வாக- நீங்கள் இந்த வார்த்தைகளை மற்றவர்களை விட அதிகமாக மனதில் கொண்டு அவற்றைச் செயல்படுத்த அயராது பாடுபட வேண்டும். இல்லையெனில், வக்ஃபே நவ் என்ற உங்களின் கூற்று வெற்று வாதமாகிவிடும்.

உண்மையான நம்பிக்கை மற்றும் இறைவனுக்கு கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதைக் குறிப்பிடும் அதே

வேளையில், அல்லாஹ் திருக்குர்ஆனில் நபி இப்ராஹீம் (அலை) அவர்களைப் புகழ்ந்துரைத்ததை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், “இறை கட்டளைகளை நிறைவேற்றிய இப்ராஹீம் (திருக்குர்ஆன் 53:38) என்ற வார்த்தைகளைக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த திருக்குர்ஆன் வார்த்தைகள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வுடன் செய்த உடன்படிக்கையை உண்மையாக நிறைவேற்றினார்கள் என்பதற்கு சாட்சியமளிக்கின்றன. அவர்கள் இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றினார்கள், அல்லாஹ்வுக்காக கடுமையான சோதனைகளையும் இன்னல்களையும் மிகுந்த பொறுமையுடனும் நிபந்தனையற்ற விசுவாசத்துடனும் தாங்கினார்கள்.




இவ்வாறு, எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு நம்பிக்கையாளர் என்ற பட்டத்தை வழங்கினான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் கீழ்ப்படிதல் நாம் சொல்லிப் பாராட்ட வேண்டிய ஒரு சம்பவம் மட்டுமல்ல. மாறாக, அது உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு உத்வேகமாக இருக்க வேண்டும். உண்மையில், தங்கள் வாழ்க்கையை தங்கள் நம்பிக்கைக்காக அர்ப்பணிப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அடிபணிதல் மற்றும் அசைக்க முடியாத நம்பிக்கையின் தரத்தை நிரூபிக்கும் ஒரு தனிப்பட்ட அறிவுறுத்தலாக நீங்கள் அதைக் கருத வேண்டும். அல்லாஹ்வுக்காக இதுபோன்ற முழுமையான விசுவாசத்தை நீங்கள் பின்பற்றவும் வெளிப்படுத்தவும் முயன்றால் மட்டுமே உங்கள் உறுதிமொழிக்கு நீங்கள் நியாயம் செய்ய முடியும். இல்லையெனில், நீங்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் செய்து கொண்ட உடன்படிக்கை மற்றும் வாக்குறுதி அர்த்தமற்றதாகி விடும். மேலும், ஒவ்வொரு வக்ஃபே நவ்வும், ஒருவரின் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுவது ஒரு சிறிய அல்லது அற்பமான விஷயம் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, எல்லா வல்லமையுள்ள அல்லாஹ், தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்களை அவன் பொறுப்பேற்கச் செய்வான் என்று கூறியுள்ளான். உங்களில் பலர் இப்போது திருமணமானவர்கள், நீங்கள் என்னைச் சந்திக்கும்போதோ அல்லது எனக்கு எழுதும் போதோ, நீங்கள், உங்கள் மனைவி மற்றும் குழந்தைகள் அனைவரும் வக்ஃபே நவ் திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறீர்கள். இவை அனைத்தும் நல்லது, ஆனால் நினைவில் கொள்ளுங்கள் உங்கள் வக்ஃபின் நோக்கங்களை விசுவாசத்துடனும் பக்தியுடனும் நிறைவேற்ற பாடுபட்டால் மட்டுமே நீங்கள் மற்றும் உங்களது குடும்பத்தினரின் வக்ஃபும் ஜமாஅத்துக்கு மதிப்புமிக்கதாக நிரூபிக்கப்படும். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அன்பைப் பெற்றார்கள், அல்லாஹ்வே “இறை கட்டளைகளை நிறைவேற்றிய இப்ராஹீம்” என்ற வார்த்தைகளால் அவரது நம்பிக்கைக்கு சாட்சியாக இருந்தான். (திருக்குர்ஆன் 53:38). ஒரு வாகிஃபீனே நவ்வாக, உங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதலின் அளவுகோல் என்ன? அது எவ்வாறு அளவிடப்படும்? இது சம்பந்தமாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“ஒரு நபர் உலகத்தின் மீதான தனது பற்றுதலையும், அதன் அனைத்து இன்பங்களையும், கௌரவத்தையும் முற்றிலுமாக துறந்து, சர்வவல்லமையுள்ள இறைவனுக்காக ஒவ்வொரு அவமானத்தையும், கஷ்டங்களையும், துன்பங்களையும் தாங்கத் தயாராக இல்லாவிட்டால், விசுவாசத்தின் தரம் பிறக்க முடியாது. இங்கே, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ் மீதான உண்மையான நம்பிக்கையையும் விசுவாசத்தையும் ஒருபோதும் வார்த்தைகளுக்குள் அடக்க முடியாது என்று கூறுகிறார்கள். மாறாக, ஒரு நபர் தனது தனிப்பட்ட ஆசைகளை வெல்ல வேண்டும் என்று அது கோருகிறது. அதற்கு ஒரு நபர் தனது தற்பெருமை மற்றும் தனிப்பட்ட விருப்பங்கள் இனி இல்லாத அளவுக்கு அதை அடக்கும் ஒரு வகையான மரணம் தேவைப்படுகிறது.”

ஒரு நபரின் ஒவ்வொரு மூச்சும் அசைவும் எல்லாம் வல்ல இறைவனின் கட்டளைகளைப் பின்பற்றும் விருப்பத்தால் மட்டுமே நிர்வகிக்கப்பட வேண்டும். உலகின் அனைத்து இன்பங்களையும், கவர்ச்சிகளையும் ஒரு நபர் கைவிட வேண்டும். இறைவனுக்காக ஒவ்வொரு வகையான அவமானம், கஷ்டம் மற்றும் போராட்டத்தையும் பொறுமையாகத் தாங்கிக் கொள்ள வேண்டும், மேலும் அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்காக ஒவ்வொரு வகையான வலி மற்றும் துன்பத்தையும் ஒரு நபர் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் இந்த நிலையை அடைந்தால் மட்டுமே, இறைவனின் சேவைக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணிப்பதாக அவர் தனது உறுதிமொழியை நிறைவேற்றியதாகக் கருத முடியும்.

நான் சொன்னது போல, உங்களில் சிலர், நீங்கள், உங்கள் மனைவி மற்றும் குழந்தைகள் அனைவரும் வக்ஃபே நவ் திட்டத்தில் இருக்கின்றார்கள் என்று பெருமையுடன் என்னிடம் கூறுகிறீர்கள். இருப்பினும், இது உங்கள் பொறுப்புகளை அதிகரிக்கிறது என்பதை உணர வேண்டும். உங்கள் உறுதிமொழியை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல், உங்கள் குழந்தைகளுக்கு வக்ஃபின் உண்மையான உணர்வும் அர்த்தமும் அவர்களுக்குள் வளர்க்கப்படுவதற்கு நீங்கள் ஒரு முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும். இல்லை எனில், நீங்களே அவ்வாறு செய்யத் தவறினால் உங்கள் குழந்தைகளுக்கு தங்கள் உறுதிமொழியை நிறைவேற்ற அறிவுறுத்தும்போது, உங்கள் வார்த்தைகளின் பாசாங்குத் -தனத்தை அவர்கள் விரைவில் புரிந்து கொள்வார்கள்.

உங்கள் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான மற்றொரு அடிப்படை அம்சம் என்னவென்றால் நீங்கள் அனைத்து வகையான சிலை வழிபாட்டையும் தவிர்க்க வேண்டும். இது சம்பந்தமாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிலை வழிபாடு என்பது மரம் அல்லது கல்லை வணங்குவது போன்ற வெளிப்படையான செயல்களோடு மட்டும் முடிவதில்லை என்று கற்பித்துள்ளார்கள். சூரியன், சந்திரன் அல்லது நட்சத்திரங்களை வணங்கும் அந்த மதங்கள் அல்லது நம்பிக்கைகளைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டும் இது முடிவடையாது. சில மனிதர்களை வணங்குபவர்கள் அவர்களை சிலைகளாக மாற்றுவதற்குள் மட்டும் இது அடங்கவில்லை.

உண்மையில், அல்லாஹ்வின் பாதையில் தடையாக இருக்கும் அல்லது அவனை விட முன்னுரிமை பெறும் ஒவ்வொரு விஷயமும் ஒரு சிலை என்று வாக்களிக்கப்பட்ட அவர்களின் ஆன்மீக வளர்ச்சியிலும், மார்க்க அறிவைப் பெறுவதிலும் ஒரு தடையாக மாற அனுமதிப்பது ஏற்புடையதல்ல. எனவே, ஒவ்வொரு வக்ஃபே ஸிந்தகியும் தங்கள் நிலையை உண்மையாகச் சிந்திக்க வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ்வை விட முன்னுரிமை அளித்து, உங்கள் உலக ஆசைகள் ஒருபோதும் சிலைகளாக மாறும் நிலையை அடையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

நிச்சயமாக, அது அழிவுக்கான பாதை மற்றும் சர்வ வல்லமையுள்ள அல்லாஹ்வின் அன்பு மற்றும் கருணையிலிருந்து உங்களைத் துண்டித்துக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாகும். ஒரு வக்ஃபே நவ் ஜமாஅத்தின் முழு நேர ஊழியராக ஆகித்தான் தங்கள் உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும் என்று அவசியமில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். மாறாக, உங்கள் மனநிலையும் செயல்களும் உங்கள் வக்ஃபை தீர்மானிக்கும். நீங்கள் செய்யும் அனைத்தும் எல்லா வல்லமையுள்ள அல்லாஹ்வின்




மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள். அதன்படி, ஒருவர் தனது தனிப்பட்ட ஆசைகள் அல்லது உலக செல்வாக்குகள் சர்வவல்லமையுள்ள இறைவனை விட முன்னுரிமை பெற அனுமதித்தால், அவர்கள் சிலை வழிபாட்டின் குற்றவாளியாக இருப்பார்கள். உதாரணமாக, உங்கள் வேலையினால் உங்களது தொழுகையை தவறவிட்டால் அல்லது நீங்கள் தாமதமாக தொழுதால், அல்லது உலகப் பணிகள் புனித குர்ஆனை ஓதுவதைத் தடுத்தால், உங்கள் வேலை ஒரு சிலையாகிவிட்டது என்றும், உங்கள் உலகப் பணிகள் அல்லாஹ் மீதான உங்கள் பக்தியை மறைத்துவிடும் என்றும் அர்த்தம்.

இதனால், பலர் அறியாமலேயே சிலைகளை வைத்திருக்கிறார்கள் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எச்சரித்துள்ளார்கள், மேலும் இது அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும் மிகுந்த நடுக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நிச்சயமாக, எந்தவொரு நம்பிக்கையாளருக்கும், குறிப்பாக வக்ஃபே ஸிந்தகி (வாழ்வை அர்ப்பணித்தவர்) தங்கள் உலகப் பணிகள் அல்லது செயல்பாடுகள் இறைவனை வணங்குவதிலும், மகிழ்ச்சியையும் நெருக்கத்தையும் அடைவதாக இருக்க வேண்டும். நீங்கள் எல்லா விஷயத்திலும் இஸ்லாத்தின் போதனைகளைப் பின்பற்றுவதில் முன்னுரிமை தர வேண்டும். நீங்கள் இந்த நிலையை அடைந்தால், ஆன்மீக வெற்றி மற்றும் செழிப்பிற்கான வாயில்கள் உங்களுக்கு முன் எவ்வாறு திறக்கும் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

இங்கே, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உதாரணத்தை மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு விசுவாசமுள்ளவர் மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றியவர் என்ற பட்டம் எந்த காரணமும் இல்லாமல் வழங்கப்பட்டதா? நிச்சயமாக இல்லை! மாறாக, அவர்கள் இறுதி தியாகத்தைச் செய்யத் தயாராக இருந்ததால் இந்த உயர்ந்த நிலையை அடைந்தார்கள். இதனால், அல்லாஹ் தனது அன்பு மகனை பலியிட விரும்புவதாக அவர்கள் நினைத்தபோது, அவர்கள் ஒரு அடி கூட பின்வாங்கவில்லை அல்லது தனது நம்பிக்கையிலிருந்து விலகவில்லை. மாறாக, தயக்கமின்றி, தனது மகனின் கழுத்தில் கத்தியை ஏந்தத் தயாராக நின்றார்கள். அந்த நேரத்தில், அல்லாஹ்வுக்காக தனது வாழ்க்கையை

அர்ப்பணிப்பதாக அவர்கள் கூறியது நிபந்தனையற்றது என்பதை அவர்கள் நிரூபித்தார்கள்.

இறைவனுக்கு சேவை செய்வதாக அவர்கள் கூறியது வெறும் வார்த்தைகளோடு நின்றுவிடவில்லை. இது சம்பந்தமாக, அல்லாஹ் ஒருவரின் நம்பிக்கையின் நடைமுறை வெளிப்பாட்டை விரும்புகிறான் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். செயல்கள்தான் அவனது வெகுமதிகளைத் தருகின்றன. இருப்பினும், இறைவனின் பாதையில் தொடர்வது காயங்களும் துன்பங்களும் இல்லாமல் சாத்தியமில்லை. உண்மையில், கஷ்டம், வலி மற்றும் துக்கம் தியாகத்திற்கு அடிப்படையானவையாகும். இருப்பினும், தியாகத்துடன் தொடர்புடைய துன்பம் ஒருபோதும் நிலையானது அல்ல. இதை விளக்கி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகையில், ஒரு நபர் அல்லாஹ்வுக்காக அனைத்து வகையான வலிகளையும் தாங்கத் தயாராக இருந்தால், பின்னர் அல்லாஹ்வே அவரை வேதனையிலிருந்தும் துன்பத்திலிருந்தும் பாதுகாத்து வைப்பான். இவ்வாறு, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் மகன் மீது கத்தியைப் பயன்படுத்தத் தயாரானபோது, அல்லாஹ் தலையிட்டு அவரைத் தடுத்து, கற்பனை செய்ய முடியாத துக்கம் மற்றும் துயரத்திலிருந்து காப்பாற்றினான். அல்லாஹ் அவரை கற்பனை செய்ய முடியாத துக்கம் மற்றும் துயரத்திலிருந்து காப்பாற்றினான். அதேபோல், இறைவனின் எதிரிகள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்பில் எறிந்தபோது, அல்லாஹ் நெருப்பை அணைத்து அவரைக் காப்பாற்றும் சூழ்நிலைகளை உருவாக்கினான். எனவே, இதுவே சர்வவல்லமையுள்ள அல்லாஹ்வின் அழகான மற்றும் கருணையுள்ள வழி, யார் தங்கள் வாக்குறுதியில் உண்மையாக இருக்கிறார் என்பதைக் கண்டறிகின்றான்.

அவனுக்காக யார் உண்மையிலேயே வலியைத் தாங்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அவன் கவனிக்கின்றான். அதன் பிறகு, அல்லாஹ் அத்தகையவர்களைத் தன் பாதுகாப்பில் எடுத்துக் கொள்கின்றான். எனவே ஒவ்வொரு வக்ஃபே நவ்வும் அல்லாஹ்வின் அன்புக்குரியவராக மாற முயல வேண்டும். நான் கூறியது போல், நீங்கள் ஜமாஅத்திற்கு வெளியே வேலை செய்கிறீர்களா அல்லது ஜமாஅத்திற்காக முழு நேரமாக சேவை செய்கிறீர்களா என்பது முக்கியமல்ல. உங்கள் நம்பிக்கை உங்களிடமிருந்து எதிர்பார்க்கும் ஒவ்வொரு தியாகத்திற்கும் நீங்கள் ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும். எல்லா வல்லமையுள்ள இறைவனுக்காக, உங்களுக்கு வரக்கூடிய எந்த வலியையும் அல்லது கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். இல்லையெனில், வக்ஃபே நவ் என்று நீங்கள் கூறுவது ஒரு வகையான ஏமாற்று வேலை.

முந்தைய பல சந்தர்ப்பங்களில், வெறும் வக்ஃபே நவ் என்ற பட்டத்தை வைத்திருப்பது அர்த்தமற்றது என்றும், அதுவே எந்த சிறப்பான அந்தஸ்தையும் வழங்காது என்றும் நான் கூறியுள்ளேன். இதன் விளைவாக, நீங்கள் மற்றவர்களை விட அல்லாஹ்விற்கு அதிகமாக அஞ்சவில்லை என்றால், வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்த நன்மையும் இல்லை என்பதை தெளிவாகக் புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் வழிபாட்டுத் தரம் மற்றவர்களை விட உயர்ந்ததாக இல்லாவிட்டால், வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்த நன்மையும் இல்லை. நீங்கள் தினமும் புனித குர்ஆனை ஓதவில்லை என்றால், அதன் அர்த்தங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிக்கவில்லை என்றால், நீங்கள் வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்த நன்மையும் இல்லை.

உங்கள் ஒழுக்கங்களும் மதிப்புகளும் உயர்ந்த நிலையில் இல்லாவிட்டால், வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. உங்கள் பேச்சு, நடத்தை, கையாளுதல், செயல்பாடுகள் மற்றும் ஈடுபாடுகள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு இணங்கவில்லை என்றால், நீங்கள் வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. உங்கள் மத அறிவை அதிகரிப்பதற்கு அல்லது உங்கள் உலக கல்வியில் சிறந்து விளங்க முயற்சிப்பதற்குப் பதிலாக, ஒழுக்கக்கேடான, அநாகரீகமான மற்றும் வன்முறையான உள்ளடக்கத்தைப் பார்ப்பதன் மூலம் உங்கள் மனதை விஷமாக்கினால், நீங்கள் வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. நீங்கள் ஜமாஅத்திற்காக உங்கள் நேரத்தைத் தொடர்ந்து தியாகம் செய்யவில்லை என்றால், வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. உங்கள் உறவினர்களை அன்புடன் நடத்தா விட்டால், உங்கள் சக ஊழியர்கள், நண்பர்கள் மற்றும் நீங்கள் சந்திப்பவர்களை கருணையுடன் நடத்தாவிட்டால், நீங்கள் வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. உங்கள் எல்லாத் தொடர்புகளிலும் உயர்ந்த ஒழுக்கத்தை -யும், மரியாதையையும் நீங்கள் கடைப்பிடிக்கவில்லை என்றால், நீங்கள் வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. நீங்கள் ஆணவம் கொண்டவராகவும், பணிவற்றவராகவும் இருந்தால், வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. எனவே ஒரு வக்ஃபே நவ்வாக, நீங்கள் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

மேலும், இறைவனின் திருப்தியை அடைவதற்கான உங்கள் முயற்சிகளில் நீங்கள் நிலையாக இருக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு நல்ல செயல்களைச் செய்த பிறகு, சிலர் இறைவனின் அன்பைப் பெற போதுமானதைச் செய்து விட்டதாக நினைக்கிறார்கள் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள். இருப்பினும், அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கு உறுதியும் அவனுக்கு முழுமையான கீழ்ப்படிதலும் தேவை என்று அவர்கள் கூறுகிறார்கள். இது புனித நபி (ஸல்) அவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட தோழர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, அவர்களின் முன்மாதிரியை நாம் பின்பற்ற வேண்டும். அதனால்தான் பல ஆண்டுகளாக எனது ஜுமுஆ பேருரையின்போது அவர்களின் குணங்கள் மற்றும் தியாகங்களைப் பற்றி விரிவாகப் பேசியுள்ளேன். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சொர்க்கத்திற்கு வழிவகுக்கும் பல கதவுகள் இருப்பதைப் போலவே, நரகத்திற்கு வழிவகுக்கும் பல கதவுகள் உள்ளன என்று நமக்கு எச்சரித்துள்ளார்கள். எனவே, தம்மைப் பின்பற்றுபவர்கள் நரகத்திற்கு வழிவகுக்கும் ஒரு கதவை

மூடிவிட்டு இன்னொரு கதவைத் திறந்து வைத்திருக்கக் கூடாது என்ற அச்சத்தை அவர்கள் வெளிப்படுத்தி -யுள்ளார்கள். எனவே, அல்லாஹ்வின் திருப்தியை அடைய, நாம் அவனுடைய அனைத்து கட்டளைகளின்படி செயல்பட பாடுபட வேண்டும். நீங்கள் ஜமாஅத்தின் உறுப்பினராக இருந்தால், நீங்கள் அதன் அமைப்பைப் பின்பற்றி அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். இவ்வாறு, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், “கீழ்ப்படிதல் இல்லாத ஒரு அஹ்மதி தனது ஜமாஅத்தை அவமதிப்பதற்கான ஒரு வழியாக இருப்பார்” என்று கூறியுள்ளார்கள். எனவே, நீங்கள் இந்த இஜ்திமாவை விட்டு வெளியேறும்போது, உங்கள் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதாக உறுதியளித்து, நீங்கள் வீட்டிற்குச் செல்லும் நேரத்தில் நான் சொன்ன அனைத்தையும் மறந்துவிட்டால், நீங்கள் வக்ஃபே நவ்வாக இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. ஜமாஅத்திற்கோ அல்லது உங்களுக்கு தனிப்பட்ட முறையிலோ எல்லா -வற்றிற்கும் மேலாக, அல்லாஹ்வுக்கு இதுபோன்ற வாழ்க்கை அர்ப்பணிப்பவர்கள் என்று அழைக்கப்படுபவர்களில் எந்த ஆர்வமும் இல்லை. உங்களில் பெரும்பாலோர் முதிர்ச்சி அடைந்த வயதை அடைந்து விட்டீர்கள், எனவே ஒவ்வொரு நாளும் நீங்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

உங்கள் வக்ஃபின் தேவைகளை நீங்கள் எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளீர்கள், உங்கள் ஆன்மிக வளர்ச்சியில் நீங்கள் முன்னேறி வருகிறீர்களா என்பதை மதிப்பிடுங்கள். உங்கள் ஒழுக்கத் தரங்களையும் மார்க்க அறிவையும் மேம்படுத்த நீங்கள் முயற்சித்திருக்கிறீர்களா என்பதை பகுப்பாய்வு செய்யுங்கள். அப்போதுதான் நீங்கள் பெயரில் மட்டுமல்ல, மனப்பான்மையிலும் செயலிலும் வக்ஃபெ நவ் என்று கூற முடியும். அப்போதுதான் ஜமாஅத்திற்குத் தேவையான, அல்லாஹ் விரும்பும் மேலும் யாருக்காக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் வக்ஃபே நவ் திட்டத்தைத் தொடங்கினார்களோ அந்த வக்ஃபே நவ்வின் நிலை மற்றும் தரத்தை நீங்கள் அடைவீர்கள்.

அல்லாஹ் உங்கள் மார்க்கத்திற்கு கீழ்படிபவர் -களாகவும் அதற்கு நம்பிக்கைகுரியவர்களாகவும் இருக்கும் உயர்ந்த தரத்தை அடைய உங்களுக்கு உதவுவானாக! இது ஓர் உண்மையான வக்ஃபே நவ்வின் அடையாளமாகும். உலகில் ஒரு ஆழமான மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஆன்மீகப் புரட்சியைத் தூண்டுவதில் நீங்கள் ஒவ்வொருவரும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். அந்த சவாலை ஏற்க வேண்டும், அதுவே உங்கள் வாழ்க்கையின் உண்மையான நோக்கமும் ஆகும். வக்ஃபே நவ்வின் உண்மையான உணர்வைப் அடையவும், நீங்கள் உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த அந்த நோக்கத்தை நிறைவேற்றவும், இந்த இஜ்திமாவில் கலந்து கொள்ள இன்று நீங்கள் கூடியிருக்கும் அந்த நோக்கத்தை நிறைவேற்றவும் அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் உதவுவானாக.

வாகிஃபீனே நவ்வாகிய நீங்கள் அனைவரும், உலகின் ஒவ்வொரு மூலைக்கும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச்செய்தியை கொண்டு செல்வதில் ஒரு சிறந்த பங்கை வகிப்பவர்களாக ஆவீர்களாக. ஆமீன்.

# செல்வத்தின் அசல் நோக்கம்!

ஹஸ்ரத் அபுதர் (ரலி) அவர்கள் அறிவிக் -கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உஹது மலையைப் பார்த்த போது கூறினார்கள்: இது (மலை) எனக்காக தங்கமாக ஆக்கப்பட்டாலும் அதிலிருந்து என்னிடம் மூன்று நாட்களுக்கும் அதிகமாக ஒரு தீனார் இருப்பதைக் (கூட) நான் விரும்ப மாட்டேன்.

அடுத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவ்வளவு பெரிய செல்வந்தராக ஒருவர் இருப்பாரோ அவ்வளவு அதிகமான தேவை உடையவராக இருப்பார். செல்வத்தை கீழ்வரு -மாறு செலவு செய்கின்ற அந்த நபரைத் தவிர!

ஹஸ்ரத் ஸய்யிது ஸெய்னுலாபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் கூறுகின் -றார்கள்: இதன் பொருள் இதுவாகும்; அதாவது செல்வச் செழிப்பு என்பது பணத்தை சேமித்து வைப்பதில் இல்லை. இன்னும் கூறப்போனால், பெரும்பாலான செல்வந்தர்கள் உயர் நல்லொழுக்கங்களிலிருந்து இழப்பிற்குரியவர் -களாக இருப்பதற்கு இந்த செல்வம் காரணமாக இருக்கின்றது. செல்வச் செழிப்பு என்பது செல்வத்தை சேர்த்து வைப்பதில் இல்லை. மாறாக வலமும் இடமும் செலவு செய்வதில் இருக்கின்றது. அதாவது மார்க்க மற்றும் பௌதீக தேவை -களுக்காக செலவு செய்வதால் செல்வத்தின் நோக்கம் முழுமை அடைகின்றது. எவர் பணத்தை சேர்த்து வைத்துள்ளாரோ அவர் உரிமைகளை செலுத்துவதற்காக அவற்றை செலவிடவில்லை என்றால் அவரே எல்லாரையும் விட வறியவர் ஆவார். ஆனால், எந்த நபர் செல்வத்தால் உரிமையை நிறைவேற்றினாரோ அவரே தன்னிறைவு பெற்றவர் ஆவார். அவர் செல்வத்தின் அசல் நோக்கத்தைப் பெற்று விட்டார்.

(சஹீஹ் புகாரி காதியான் பதிப்பு 2008)

# இறைமறுப்புக் கொள்கையின் நாடி நரம்பைத் துண்டிக்கும் சக்தி திருக்குர்ஆனுக்கு மட்டுமே உள்ளது!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:




“ஒரு நற்பேறிழந்த இறைமறுப்பாளர் வானங்களும் பூமியும் தொன்று தொட்டே படைப்பாளனின் தேவையின்றி இருந்து வருகின்றன என்று கூறுவதற்கு சாத்தியம் உள்ளது. ஆனால் ஒரு நூலைக் குறித்து அதனை உருவாக்குவது மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்று ஏற்றுக் கொள்ளும் ஒருவர் அந்த நூலை அருளிய இறைவன் உண்மையிலேயே இருக்கின்றான் என்று ஏற்றுக் கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழி இல்லை. மேலும் இந்நிலையில் இறைஇருப்பை ஏற்றுக் கொள்வது வெறும் அனுமானத்தின் அடிப்படையில் அல்ல. மாறாக அந்த இறைவேதமே இறைவன் இருக்கின்றான் என்பதற்கும், தீர்ப்பளிக்கப்படும் நாளின் உண்மைக்கும் சாட்சியாக விளங்குகிறது. இவ்வாறு உண்மையைத் தேடும் ஒருவர், நிச்சய உறுதியை பூமியிலும் வானங்களிலும் தேடினால் அங்கு அதனைப் பெற மாட்டார். ஆனால் அதனை இங்கு (இறைவனால் அருளப்பட்ட வேதத்தில்) அவர் கண்டு கொள்வார். எனவே ஓர் இறைமறுப்பாளரை இறைஇருப்பின் மீது நம்பிக்கை கொள்ள வைப்பது ஒரு தன்னிகரற்ற இறைவேதமே தவிர பூமியையும் வானங்களையும் கவனித்துப் பார்ப்பது அல்ல.

பகுத்தறிவு வாதங்களை மட்டுமே சார்ந்து இருக்கின்ற ஒருவரிடம் இறைமறுப்பின் நரம்பு இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மற்றவர்களிடம் மறைந்து காணப்படுகின்ற இதே நரம்பு, ஓர் இறைமறுப்பாளரிடம் வீங்கியும் பருத்தும் காணப்படுகிறது. இறைவனால் அருளப்பட்ட ஒரு நூலின் மூலமாகவே இந்த நரம்பு துண்டிக்கப்பட முடியும். ஏனெனில் உண்மையிலேயே அதனை உருவாக்குவது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும். வானங்கள் மற்றும் பூமியை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் மக்கள் எப்போதுமே பல்வேறு வகையான முடிவுகளுக்கே வந்துள்ளனர் என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். சிலர் ஒரு விதத்திலும் மற்றவர்கள் மற்றொரு விதத்திலும் அதனை அறிந்து கொண்டனர். இந்த வித்தியாசம் ஒரு தன்னிகரற்ற வேத நூல் தொடர்பாக எழ முடியாது . எந்த ஒரு நபரும் ஓர் இறைமறுப்பாளர் கூட ஒரு தன்னிகரற்ற வார்த்தை அதனைப் பேசுபவர் எவரும் இல்லாமல் தொன்று தொட்டு (அவரது நம்பிக்கையின்படி வானங்கள் மற்றும் பூமி இருப்பது போன்று) இருந்து வருகிறது என்று கூற மாட்டார். ஓர் இறைமறுப்பாளர் ஒரு தன்னிகரற்ற நூலைக் குறித்து அதனுடைய தன்னிகரற்ற தன்மையைப் பற்றி மட்டுமே விவாதம் செய்வார். எப்பொழுது அவர் இத்தகைய நூலை இயற்றுவது மனித சக்திக்கு அப்பாற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்வாரோ அப்போது இறைஇருப்பின் மீதான ஒரு நம்பிக்கையின் விதை அவருடைய உள்ளத்தில் ஊன்றப்பட்டு விடும். இதற்குக் காரணம் இந்த விஷயத்தில் ஒரு பேசுபவர் இருப்பதன் அவசியத்தை உண்மையிலேயே ஏற்றுக் கொண்டாக வேண்டுமே தவிர ஒரு வாதத்திற்காக ஏற்றுக் கொள்வதற்கு எந்த வழியும் இல்லை. ஏனெனில் ஒரு சொல் ஒரு பேசுபவர் இல்லாமல் சுயமே இருக்க முடியாது.”

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 3 ஆங்கிலப் பதிப்பு பக்கம் 44-45)